முழுப்பதிப்புரிமையுடையது

அந்தரங்கமானது

# இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

## க.பொ.த. (சாதாரண தர)ப் பரீட்சை - 2019

# 34 - விஞ்ஞானம்

## புள்ளி வழங்கும் திட்டம்




பிரதமபரீட்சகர்களின் கலந்துரையாடல் நடைபெறும் சந்தர்ப்பத்தில் பரிமாறிக்கொள்ளும் கருத்துக்களுக்கிணங்க, இதில் உள்ளசிலவிடயங்கள் மாறலாம்.

இறுதித் திருத்தங்கள் உள்ளடக்கப்படவுள்ளன.

# இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
## க.பொ.த (சா.தர)ப் பரீட்சை – 2019
## 34 – விஞ்ஞானம்
## புள்ளி வழங்கும் திட்டம்

### வினாப்பத்திரம் I

வினாக்களின் எண்ணிக்கை = 40

ஒரு வினாவுக்கான சரியான விடைக்கு வழங்கப்படும் புள்ளிகள் = 2

மொத்தப் புள்ளிகள் = 2 x 40 = 80

### வினாப்பத்திரம் II

#### பகுதி – A

4 கட்டாய வினாக்களைக் கொண்டுள்ளது.

ஒரு வினாவின் அனைத்து சரியான விடைகளுக்கும் வழங்கப்படும் புள்ளிகள் = 15

4 வினாக்களுக்குமான மொத்தப் புள்ளிகள் = 4 x 15 = 60

#### பகுதி – B

5 வினாக்களைக் கொண்டுள்ளது.

தெரிவு செய்யப்பட்ட 3 வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்க வேண்டும்.

ஒரு வினாவின் அனைத்து சரியான விடைகளுக்கும் வழங்கப்படும் புள்ளிகள் = 20

3 வினாக்களுக்குமான மொத்தப் புள்ளிகள் = 20 x 3 = 60

வினாப்பத்திரம் I இற்கான புள்ளிகள் = 80

வினாப்பத்திரம் II இன் பகுதி A,B ஆகியவற்றுக்கான புள்ளிகள் = 120

மொத்தப் புள்ளிகள் = 200

இறுதிப் புள்ளிகள் = 200 ÷ 2 = 100

# க.பொ.த (சா.தர)ப் பரீட்சை - 2019
## விடைத்தாள்களுக்குப் புள்ளியிடல் - பொது நுட்ப முறைகள்

விடைத்தாள்களுக்குப் புள்ளியிடும் போதும், புள்ளிப்பட்டியலில் புள்ளிகளைப் பதியும் போதும் ஓர் அங்கீகரிக்கப்பட்ட முறையைக் கடைப்பிடித்தல் கட்டாயமானதாகும். அதன் பொருட்டு பின்வரும் முறையில் செயற்படவும்.

1. விடைத்தாளுக்குப் புள்ளியிடுவதற்கு சிவப்பு நிற குமிழ்முனைப் பேனாவை பயன்படுத்தவும்.
2. சகல விடைத்தாள்களினதும் முதற்பக்கத்தில் உதவிப் பரீட்சகரின் குறியீட்டெண்ணைக் குறிப்பிடவும். இலக்கங்கள் எழுதும் போது தெளிவான இலக்கத்தில் எழுதவும்.
3. இலக்கங்களை எழுதும் போது பிழைகள் ஏற்பட்டால் அவற்றைத் தனிக்கோட்டினால் கீறிவிட்டு, மீண்டும் பக்கத்தில் சரியாக எழுதி, ஒப்பம் இடவும்.
4. ஒவ்வொரு வினாவினதும் உபபகுதிகளின் விடைகளுக்காக பெற்றுக்கொண்ட புள்ளியை பதியும் போது அந்த வினாப்பகுதிகளின் இறுதியில் △ இன் உள் பதியவும். இறுதிப் புள்ளியை வினா இலக்கத்துடன் ▢ இன் உள் பின்னமாகப் பதியவும். புள்ளிகளைப் பதிவதற்கு பரீட்சகர்களுக்காக ஒதுக்கப்பட்ட நிரலை உபயோகிக்கவும்.

**உதாரணம் - வினா இல 03**

(i) ........................................................................ ✓ $\frac{4}{5}$
........................................................................
........................................................................

(ii) ........................................................................ ✓ $\frac{3}{5}$
........................................................................
........................................................................

(iii) ........................................................................ ✓ $\frac{3}{5}$
........................................................................
........................................................................

(03) (i) $\frac{4}{5}$ + (ii) $\frac{3}{5}$ + (iii) $\frac{3}{5}$ = $\boxed{\frac{10}{15}}$

**பல்தேர்வு விடைத்தாள் (துளைத்தாள்)**

1. புள்ளி வழங்கும் திட்டத்தின் படி சரியான தெரிவைத் துளைத்தாளில் அடையாளமிடவும். அவ்வாறு அடையாளமிடப்பட்ட இடத்தை வெட்டி நீக்கித் துளைத்தாளைத் தாயரிக்கவும். துளைத்தாளை விடைகளின் மீது சரியாக வைத்துக்கொள்ளக்கூடியதாகச் சுட்டெண் அடைப்பையும் வெட்டி நீக்கவும். சரியான விடைகளின் எண்ணிக்கையைக் காட்டும் அடைப்பையும் வெட்டி நீக்கவும். சரியான, பிழையான விடைகளை குறிப்பிடக்கூடியதாக ஒவ்வொரு வரிசைக்கும் இறுதியில் வெற்று நிரையொன்றை வெட்டி ஏற்படுத்திக் கொள்ளவும். **வெட்டிக்கொண்ட துளைத்தாளில் பிரதம பரீட்சகரிடம் கையொப்பம் பெற்று அங்கீகரித்துக் கொள்ளவும்.**

2. அதன் பின்னர் விடைத்தாளை நன்கு பரிசீலித்துப் பார்க்கவும். ஏதாவது வினாவுக்கு, ஒரு விடைக்கும் அதிகமாக குறியிட்டிருந்தாலோ, ஒரு விடைக்காவது குறியிடப்படாமலிருந்தாலோ தெரிவுகளை வெட்டிவிடக்கூடியதாக கோடொன்றைக் கீறவும். சில வேளைகளில் பரீட்சார்த்தி முன்னர் குறிப்பிட்ட விடையை அழித்து விட்டு வேறு விடைக்குக் குறியிட்டிருக்க முடியும். அவ்வாறு அழித்துள்ள போது நன்கு அழிக்காது விட்டிருந்தால், அவ்வாறு அழிக்கப்பட்ட தெரிவின் மீதும் கோடிடவும்.

3. துளைத்தாளை விடைத்தாளின் மீது சரியாக வைக்கவும். சரியான விடையை √ அடையாளத்தாலும் பிழையான விடையை X அடையாளத்தாலும் இறுதி நிரலில் அடையாளமிடவும். சரியான விடைகளின் எண்ணிக்கையை அவ்வவ் தெரிவுகளின் இறுதி நிரையின் கீழ் எழுதி அவற்றைக் கூட்டி சரியான புள்ளியை உரிய கட்டத்தில் எழுதவும்.

**கட்டமைப்பு கட்டுரை மற்றும் கட்டுரை விடைத்தாள்கள்**

1. பரீட்சார்த்திகளினால் விடைத்தாளில் வெறுமையாக விடப்பட்டுள்ள இடங்களையும், பக்கங்களையும் குறுக்குக் கோடிட்டு வெட்டிவிடவும், **பிழையான பொருத்தமற்ற விடைகளுக்குக் கீழ் கோடிடவும். புள்ளி வழங்கக்கூடிய இடங்களில் √ அடையாளமிட்டு அதனைக் காட்டவும்.**
2. புள்ளிகளை ஓவலண்ட் கடதாசியின் இடது பக்கத்தில் குறிக்கவும்.
3. சகல வினாக்களுக்கும் கொடுத்த முழுப் புள்ளியை விடைத்தாளின் முன்பக்கத்தில் உள்ள பொருத்தமான பெட்டியினுள் வினா இலக்கத்திற்கு நேராக இரண்டு இலக்கங்களில் பதியவும். வினாத்தாளில் உள்ள அறிவுறுத்தலின் படி வினாக்கள் தெரிவு செய்யப்படல் வேண்டும். எல்லா வினாக்களினதும் புள்ளிகளும் முதல் பக்கத்தில் பதியப்பட்ட பின் விடைத்தாளில் மேலதிகமாக எழுதப்பட்டிருக்கும் விடைகளின் புள்ளிகளில் குறைவான புள்ளிகளை வெட்டிவிடவும்.
4. மொத்தப் புள்ளிகளை கவனமாகக் கூட்டி முன்பக்கத்தில் உரிய கூட்டில் பதியவும். விடைத்தாளில் வழங்கப்பட்டுள்ள விடைகளுக்கான புள்ளியை மீண்டும் பரிசீலித்த பின் முன்னால் பதியவும். ஒவ்வொரு வினாக்களுக்கும் வழங்கப்படும் புள்ளிகளை உரிய விதத்தில் எழுதவும்.

**புள்ளிப்பட்டியல் தயாரித்தல்**

ஒரு வினாப்பத்திரம் உள்ள பாடங்கள் தவிர ஏனைய சகல பாடங்களுக்குமான இறுதிப்புள்ளி குழுவினுள் கணிப்பிடப்பட மாட்டாது. இது தவிர ஒவ்வொரு வினாப்பத்திரத்துக்குமான இறுதிப்புள்ளி தனித்தனியான புள்ளிப்பட்டியலில் பதியப்படவேண்டும். வினாப்பத்திரம் I இற்குரிய புள்ளிப்பட்டியலில் "வினாப்பத்திரம் I" எனும் நிரலில் **பதிந்து எழுத்திலும் எழுத வேண்டும்.** பகுதிப் புள்ளிகளை உள்ளடக்கி "வினாப்பத்திரம் II" எனும் நிரலில் வினாப்பத்திரம் II இற்குரிய இறுதிப்புள்ளியைப் பதியவேண்டும். 43 - சித்திரப் பாடத்திற்குரிய I,II மற்றும் III ஆம் வினாப்பத்திரத்திற்குரிய புள்ளிகளைத் தனித்தனியாகப் புள்ளிப்பட்டியலில் பதிந்து **எழுத்திலும்** எழுதுதல் **வேண்டும்.**

21 - சிங்களமொழியும் இலக்கியமும், 22 – தமிழ்மொழியும் இலக்கியமும் ஆகிய இரு பாடங்களுக்கும் வினாப்பத்திரம் I இற்குரிய புள்ளிகளைப் புள்ளிப் பட்டியலில் "வினாப்பத்திரம் I" என்ற நிரலில் பதிந்து எழுத்திலும் எழுத வேண்டும். வினாப்பத்திரம் II, III இற்கான புள்ளிகளை தனித்தனியான புள்ளித்தாளில் பகுதிப்புள்ளிகளை உள்ளடக்கி "வினாப்பத்திரம் II, III" எனும் நிரல்களில் உரிய நிரலில் பதிய வேண்டும்.

முக்கிய குறிப்பு:

**சலக சந்தர்ப்பங்களிலும் ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் உரிய முழுப் புள்ளிகளை முழுத்தானத்தில் வினாப்பத்திரம் I, II மற்றும் III என்ற நிரலில் உரிய வகையில் பதிதல் வேண்டும். எந்தவிதமான காரணங்களுக்காகவும் வினாப்பத்திரத்தின் இறுதிப்புள்ளியானது தசம தானங்களில் பதியப்படலாகாது.**

## முதலாம் பத்திரத்தின் நோக்கங்கள்

விஞ்ஞானம் 40 பல்தேர்வு வினாக்களைக் கொண்டது. ஒரு மணித்தியாலத்தினுள் பரந்த பாடப்பரப்புக்கள் தொடர்பான அறிவு சோதிக்கப்பட வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. பாடப்பரப்புக்கள் அனைத்தையும் பற்றிய மாணவரது அறிவைச் சோதிக்க வேண்டும் என்பதே இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது. பல்தேர்வு வினாக்கள் பொதுவாக பாடவிடயங்கள் தொடர்பான ஆழமான அறிவை அன்றி அறிவு, கிரகித்தல், பிரயோகம் போன்ற எளிய மட்டங்கள் தொடர்பாகவே கூடுதலான கவனஞ் செலுத்தப்படுகின்றன. அத்துடன் பகுப்பு, தொகுப்பு, மதிப்பீடு தொடர்பான உயர் உள ஆற்றல்களை இயன்றவரை சோதித்தல் இதன் மூலம் எதிர்பாரக்கப்படுகின்றது. வினாப்பத்திரத்தின் கடைசியான சில வினாக்கள் விஞ்ஞான முறை பற்றிய விஞ்ஞான மனப்பாங்குகளையும் சோதிப்பதற்காக முன்வைக்கப்படுகின்றன.

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் Department of Examinations, Sri Lanka

**34 T I**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2019 දෙසැම්බර්
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2019 டிசெம்பர்
**General Certificate of Education (Ord. Level) Examination, December 2019**

07 . 12 . 2019 / 1300 - 1400

විද්‍යාව I
விஞ்ஞானம் I
Science I

පැය එකයි
ஒரு மணித்தியாலம்
*One hour*

**அறிவுறுத்தல்கள் :**

- ❋ எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
- ❋ **1** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்க.
- ❋ **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (×) இடுக.**
- ❋ அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, அவற்றைப் பின்பற்றுக.

**1.** ஈரல் என்பது,
(1) கலமாகும். (2) இழையமாகும். (3) அங்கமாகும். (4) தொகுதியாகும்.

**2.** உயிரியல் நிலைப்படுத்தலுக்குப் பின்வரும் எவ்வட்டத்தின் சமநிலை பேணப்படுதல் முக்கியத்துவம் வாய்ந்தது?
(1) காபன் வட்டம் (2) நைதரசன் வட்டம் (3) பொசுபரசு வட்டம் (4) நீர் வட்டம்

**3.** பின்வருவனவற்றுள் காவிக் கணியமாகக் கருதப்படுவது எது?
(1) இடப்பெயர்ச்சி (2) தூரம் (3) அமுக்கம் (4) வேலை

**4.** மிக அதிக எண்ணிக்கையான அணுக்களைக் கொண்ட மூலக்கூறு பின்வருவனவற்றுள் எது?
(1) $CH_3CHO$ (2) $CCl_4$ (3) $H_2SO_4$ (4) $CO(NH_2)_2$

**5.** வெளிக்களக் கற்றலின்போது மாணவன் ஒருவனால் அவதானிக்கப்பட்ட நிலக்கீழ்த் தண்டின் பருமபடி உரு கீழே தரப்பட்டுள்ளது. இது எவ்வகை நிலக்கீழ்த் தண்டைச் சேர்ந்தது?



(1) வேர்த்தண்டுக்கிழங்கு
(2) தண்டுக்கிழங்கு
(3) குமிழ்
(4) தண்டு முகிழ்

**6.** பின்வரும் கட்டமைப்பு - தொழிற் சோடிகளில் சரியான தொடர்பினைக் காட்டும் சோடி எது?

| | கட்டமைப்பு | தொழில் |
|---|---|---|
| (1) | குருதிச் சிறுதட்டுகள் | பிறபொருளெதிரிகளை உற்பத்திசெய்தல் |
| (2) | வெண்குருதிக் கலங்கள் | ஒட்சிசனைக் கொண்டுசெல்லல் |
| (3) | செங்குருதிக் கலங்கள் | தின்குழியச்செயல் |
| (4) | குருதித் திரவவிழையம் | ஓமோனைக் கொண்டுசெல்லல் |

**7.** இரும்பின் சார் அணுத் திணிவு 56 ஆகும். இதற்கேற்பக் கீழே தரப்பட்டுள்ள கூற்றுகளுள் சரியானது எது?
(1) ஓர் இரும்பு அணுவின் திணிவு 56 g ஆகும்.
(2) ஓர் இரும்பு மூல் 56 இரும்பு அணுக்களைக் கொண்டுள்ளது.
(3) $6.022 \times 10^{23}$ இரும்பு அணுக்களின் திணிவு 56 g ஆகும்.
(4) 56 இரும்பு அணுக்களின் திணிவு $6.022 \times 10^{23}$ g ஆகும்.

**8.** கீழே தரப்பட்ட மூலக்கூறுகளில் எது இரண்டு பங்கீட்டுவலுப் பிணைப்புகளைக் கொண்டது?
(1) $Cl_2$ (2) $CH_4$ (3) $HCl$ (4) $H_2O$

9. மனித உடலின் அசைவுகளின் இயைபாக்கம், சமநிலை என்பவற்றைப் பேணுவதற்கு உதவுவது
(1) மூளி (2) மூளையம்
(3) நீள்வளைய மையவிழையம் (4) முண்ணாண்

10. தாவரம் ஒன்றில் இடம்பெறும் பல்வேறு செயன்முறைகள் தொடர்பான கீழே தரப்பட்டுள்ள கூற்றுகளைக் கருத்தில் கொள்க.
*A* - தாவரங்கள் இரவு நேரங்களில் மட்டும் காபனீரொட்சைட்டை வெளியேற்றும்.
*B* - தாவரங்கள் பகல் நேரங்களில் ஒட்சிசனை மட்டும் வெளியேற்றும்.
*C* - தாவர இலைகளில் வாயுப் பரிமாற்றம் பிரதானமாக நிகழ்வது இலைவாய்களினூடாகவாகும்.
*D* - தாவர இலைகளில் உட்புகும் வாயுக்கள் கலத்திடைவெளிகளினூடாக இலைக் கலங்களுக்கும் பரவும்.

மேலே தரப்பட்ட $A, B, C, D$ ஆகிய கூற்றுகளுள் உண்மையானவை
(1) $A$ யும் $B$ யும் மட்டும் (2) $A$ யும் $D$ யும் மட்டும்
(3) $B$ யும் $C$ யும் மட்டும் (4) $C$ யும் $D$ யும் மட்டும்


11. புவியின் மேற்பரப்பு மீது ஈர்ப்பினாலான ஆர்முடுகல் $10\ m\ s^{-2}$ ஆகும். சந்திரனின் மேற்பரப்பு மீது ஈர்ப்பினாலான ஆர்முடுகலானது புவியீர்ப்பினாலான ஆர்முடுகலின் $\frac{1}{6}$ ஆகும். புவி மீது ஒரு மனிதனின் நிறை 600 N எனின், சந்திரனின் மீது அவனுடைய நிறை யாது?
(1) 60 N (2) 100 N (3) 360 N (4) 600 N

12. குருதிச்சோகைக்குப் பின்வரும் எவ்விற்றமின் குறைபாடு காரணமாகும்?
(1) விற்றமின் A (2) விற்றமின் B (3) விற்றமின் E (4) விற்றமின் K

13. மனித இனப்பெருக்கத்தில் கருக்கட்டல் நடைபெறுவது பெண்ணின் இனப்பெருக்கத் தொகுதியின் எப்பகுதியிலாகும்?
(1) யோனிமடல் (யோனி வழி) (2) கருப்பை
(3) பலோப்பியோக் குழாய் (4) சூலகங்கள்

14. $1.0\ mol\ dm^{-3}$ செறிவுள்ள $500\ cm^3$ குளுக்கோசுக் கரைசலைத் தயாரிப்பதற்குத் தேவையான குளுக்கோசின் திணிவு யாது? (குளுக்கோசின் சார் மூலக்கூற்றுத் திணிவு = 180)
(1) 45 g (2) 90 g (3) 180 g (4) 360 g

15. 25 செக்கன்களில் பொருள் ஒன்றின் இயக்கம் தரப்பட்டுள்ள வேக - நேர வரைபில் காட்டப்பட்டுள்ளது. பொருளின் இயக்கம் தொடர்பான சரியான கூற்றினைத் தெரிவுசெய்க.
(1) பொருளின் அமர்முடுகல் $2\ m\ s^{-2}$ ஆகும்.
(2) பொருளின் இடப்பெயர்ச்சி பூச்சியமாகும்.
(3) பொருளின் ஆர்முடுகல் $10\ m\ s^{-2}$ ஆகும்.
(4) பொருள் $10\ m\ s^{-1}$ வேகத்துடன் 20 செக்கன்களுக்கு இயங்கியுள்ளது.





16. இலிப்பேசு நொதியம் உணவுக் கால்வாயின் எப்பகுதியில் உணவுடன் சேர்கின்றது?
(1) முன்சிறுகுடல் (2) இரைப்பை (3) களம் (4) பெருங்குடல்

17. பொற்றாசியம் பரமங்கனேற்றின் ($KMnO_4$) பிரிகை தொடர்பான சமப்படுத்தப்பட்ட சமன்பாடு கீழே தரப்பட்டுள்ளது.


$$2KMnO_4 \xrightarrow{\Delta} K_2MnO_4 + MnO_2 + O_2$$

இதற்கேற்ப 3 மூல் ஒட்சிசன் வாயுவை உற்பத்தி செய்வதற்கு எத்தனை மூல் பொற்றாசியம் பரமங்கனேற்று பிரிகையடையச் செய்யப்பட வேண்டும்?
(1) 1 (2) 2 (3) 4 (4) 6


18. சீரான தடையை உடைய சம நீளமுள்ள மூன்று கம்பிகள் உள்ளன. இவற்றில் முதலாவது கம்பியை முழுமையாகவும் இரண்டாவது கம்பி சமமான இரண்டு துண்டுகளாகவும் மூன்றாவது கம்பி சமனான மூன்று துண்டுகளாகவும் வெட்டப்பட்டு ஒரே மின்சுற்றின் $X$ இற்கும் $Y$ இற்குமிடையே இணைக்கப்பட்டுள்ள மூன்று சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன. (பற்றரியின் வோல்ற்றளவு மாறாமல் இருக்கின்றதெனக் கொள்க.)



சந்தர்ப்பம் 1



சந்தர்ப்பம் 2



சந்தர்ப்பம் 3

மின்சுற்றுடன் இணைக்கப்பட்டுள்ள குமிழ் அதிக பிரகாசத்துடன் ஒளிர்வது
(1) சந்தர்ப்பம் 1 இல் (2) சந்தர்ப்பம் 2 இல்
(3) சந்தர்ப்பம் 3 இல் (4) சந்தர்ப்பங்கள் 2 இலும் 3 இலும்

**19.** கீழே தரப்பட்டுள்ள பதார்த்தங்களைக் கருத்தில் கொள்க.

$A$ - திண்மச் சோடியம் குளோரைட்டுப் பளிங்குகள்

$B$ - உருகிய சோடியம் குளோரைட்டு


$C$ - நீர்ச் சோடியம் குளோரைட்டுக் கரைசல்

மேலே கூறப்பட்ட பதார்த்தங்களுள் மின்னைக் கடத்தக்கூடியவை

(1) $A$ யும் $B$ யும் மட்டும் (2) $A$ யும் $C$ யும் மட்டும்

(3) $B$ யும் $C$ யும் மட்டும் (4) $A, B, C$ ஆகிய எல்லாம்

**20.** ஓர் இலத்திரன் உபகரணத்திற்கு மின்னை வழங்கும்போது மின் முதலின் முடிவிடங்களை மாற்றித் தொடுத்தால், உபகரணம் பாதிப்படையக்கூடும். அத்தகைய ஒரு பாதிப்பிலிருந்து உபகரணத்தைப் பாதுகாப்பதற்கு அதனுடன் ஓர் இருவாயியை இணைக்க வேண்டிய விதம் பின்வரும் எவ்வுருவில் சரியாகக் காட்டப்பட்டுள்ளது?




(1) (2) (3) (4)

**21.** சேர்வை HA இன் ஒரு நீர்க் கரைசலில் $H^+$ அயன்கள், $A^-$ அயன்கள், $OH^-$ அயன்கள் ஆகியவற்றுடன் பிரிகையுறாத HA மூலக்கூறுகளும் இருப்பதாகக் காணப்பட்டது. இக்கரைசலின் pH பெறுமானம் 7 இலும் குறைவாகும். HA தொடர்பான பின்வரும் கூற்றுகளுள் உண்மையானது எது?

(1) HA ஒரு வன் அமிலம் (2) HA ஒரு மென்னமிலம்

(3) HA ஒரு மென் காரம் (4) HA ஓர் அமில உப்பு

**22.** மாணவர் குழு ஒன்றின் சூழல் கற்கையின்போது இனங்காணப்பட்ட விலங்கினங்களும் அவற்றின் எண்ணிக்கைகளும் கீழே காட்டப்பட்டுள்ளன.

| விலங்கு இனம் | நத்தை | வண்ணத்துப்பூச்சி | சிலந்தி | அட்டை | தேள் |
|---|---|---|---|---|---|
| எண்ணிக்கை | 5 | 4 | 3 | 2 | 1 |

மாணவர்களால் இனங்காணப்பட்ட ஆத்திரப்போடாக் கணத்தில் அடங்கும் விலங்குகளின் எண்ணிக்கை யாது?

(1) 7 (2) 8 (3) 9 (4) 10

**23.** கடல் மட்டத்தில் வளிமண்டல அமுக்கம் $1 \times 10^5\ N\ m^{-2}$ ஆகும். மனிதனின் செவிப்பறை மென்சவ்வின் பரப்பளவு ஏறத்தாழ $5 \times 10^{-5}\ m^2$ ஆகும். வளிமண்டல அமுக்கத்தினால் செவிப்பறை மென்சவ்வு மீது உஞற்றப்படும் விசை பின்வருவனவற்றுள் எது?

(1) 5 N (2) $\frac{1}{5}$ N (3) $\frac{1}{5} \times 10^{10}$ N (4) $5 \times 10^{-10}$ N

**24.** 100% திறன் உள்ள நிலைமாற்றி ஒன்றின் முதன்மைச் சுருளுக்கு வழங்கும் வலு 200 W ஆகும். அதன் துணைச் சுருளுக்குக் குறுக்கே உள்ள வோல்ற்றளவு 10 V ஆயின், துணைச் சுருளினூடாகச் செல்லும் ஓட்டம் பின்வருவனவற்றுள் எது?

(1) 10 A (2) 20 A (3) 40 A (4) 50 A

**25.** மலச்சிக்கலைத் தடுக்க உதவுவது தாவரக்கலத்தில் அடங்கியுள்ள எந்தப் பல்சக்கரைட்டாகும்?

(1) மாப்பொருள் (2) கிளைக்கோஜன் (3) செலுலோசு (4) இலக்ரோசு

**26.** ஆரோக்கியமான மனிதனின் சிறுநீரில் அதிக அளவில் அடங்கியுள்ள கூறு எது?

(1) நீர் (2) யூரியா (3) யூரிக்கமிலம் (4) உப்புகள்

**27.** கூற்று மூலகங்களாகக் காபனும் ஐதரசனும் மாத்திரம் அடங்கிய பல்பகுதியம் பின்வருவனவற்றுள் எது?

(1) வல்கனைசுப்படுத்தப்பட்ட இறப்பர் (2) பொலித்தீன்

(3) ரெப்லோன் (4) செலுலோசு

**28.** ஒரு காந்தப் புலத்தில் வைக்கப்பட்ட ஓட்டத்தைக் காவும் கடத்தி மீது உஞற்றப்படும் (பிரயோகிக்கப்படும்) விசையைக் கொண்டு தொழிற்படும் உபகரணம் எது?

(1) அசையும் சுருள் நுணுக்குப்பன்னி (2) மின்மணி

(3) நிலைமாற்றி (4) நேரோட்ட மோட்டர்

**29.** கீழே தரப்பட்டுள்ள கூற்றுகளுள் **பொய்யான** கூற்றைத் தெரிவுசெய்க.

(1) கனிய எண்ணெய்ச் சுத்திகரிப்பிற்காகப் பகுதிபடக் காய்ச்சி வடித்தல் பயன்படுத்தப்படும்.

(2) கறுவா எண்ணெய்ப் பிரித்தெடுப்பிற்காகக் கொதிநீராவிக் காய்ச்சி வடித்தல் பயன்படும்.

(3) தைலம், அரிஷ்டம் ஆகியவற்றின் பிரித்தெடுப்பிற்காகக் கரைப்பான் பிரித்தெடுப்பு பயன்படும்.

(4) ஓர் ஆவியாகக்கூடிய கூறுக் கலவையை வேறுபடுத்துவதற்கு நிறப்பதிவியல் பயன்படும்.


● **30, 31** ஆகிய வினாக்கள் எதீனின் ($C_2H_4$) பூரண தகனம் தொடர்பான கீழே தரப்பட்டுள்ள சமன்படுத்தப்பட்ட சமன்பாட்டினை அடிப்படையாகக் கொண்டவையாகும்.

$$C_2H_4(g) + 3O_2(g) \longrightarrow 2CO_2(g) + 2H_2O(l) + 1400\,kJ$$

$(H = 1, C = 12, O = 16)$

**30.** எதீனின் ஒரு மூல் பூரண தகனத்திற்கு உட்படும்போது உண்டாகும் நீரின் திணிவு யாது?
(1) 2 g (2) 18 g (3) 36 g (4) 44 g

**31.** எதீனின் பூரண தகனம் தொடர்பான சரியான சக்தி மட்ட வரிப்படம் பின்வருவனவற்றுள் எது?




(1) (2) (3) (4)

**32.** நீர்வீழ்ச்சி ஒன்றின் அடிவாரத்தில் வாயுக் குமிழிகள் அடங்கிய நீரில் நீந்தும் ஒருவருக்கு நீரில் மூழ்கும் சாத்தியம் அதிகமாகும். இதற்கான காரணம் யாது?
(1) நீரினால் உஞற்றப்படும் (பிரயோகிக்கப்படும்) மேலுதைப்பு அதிகரித்தல்
(2) நீரினால் உஞற்றப்படும் மேலுதைப்பு குறைதல்
(3) நீரில் அதிக அளவு வாயு கரைந்திருத்தல்
(4) நீரின் வெப்பநிலை குறைதல்

**33.** ஓர் ஒலிபெருக்கியினால் வெளிவிடப்படும் ஓர் ஒலி அலை வளியினூடாகச் செல்லும்போது அதன்
(1) மீடிறன் குறையும் (2) வேகம் குறையும்
(3) அலைநீளம் குறையும் (4) வீச்சம் குறையும்

**34.** இரும்பு பிரித்தெடுக்கப்படும்போது ஊதுலையில் சுண்ணாம்புக்கல்லைச் சேர்ப்பது ஏன்?
(1) இரும்புத்தாது இரும்பாகத் தாழ்த்தப்படுவதற்காக
(2) ஊதுலையில் உள்ள வெப்பநிலையை அதிகரிக்கச் செய்வதற்காக
(3) இரும்புத் தாதில் உள்ள சில கழிவுகளை அகற்றுவதற்காக
(4) இரும்பின் உருகுநிலையைக் குறைப்பதற்காக

**35.** கீழே தரப்பட்ட வாயுக்களில் ஓசோன் படலம் வறிதாவதற்கு (சிதைவடைவதற்கு) அதிக தாக்கத்தை ஏற்படுத்துவது எது?
(1) CFC வாயுக்கள் (2) $NO_2$ வாயு (3) $CH_4$ வாயு (4) $CO_2$ வாயு

**36.** $^{20}_{10}Ne$ அணு, $^{23}_{11}Na^+$ அயன் ஆகியன பற்றிய உண்மையான கூற்று எது?
(1) இரண்டிலும் உள்ள இலத்திரன்களின் எண்ணிக்கைகள் சமன்
(2) இரண்டிலும் உள்ள புரோத்தன்களின் எண்ணிக்கைகள் சமன்
(3) இரண்டிலும் உள்ள நியூத்திரன்களின் எண்ணிக்கைகள் சமன்
(4) இரண்டிலும் உள்ள புரோத்தன்களின் எண்ணிக்கை நியூத்திரன்களின் எண்ணிக்கையிலும் விட அதிகம்.

**37.** ஒரு குறித்த உயரம் வரை நீர் இடப்பட்ட பாத்திரம் ஒன்றின் அடி மீது நீரினால் உஞற்றப்படும் அமுக்கத்தில் கீழே தரப்பட்டுள்ள எக்காரணி தாக்கத்தை ஏற்படுத்தும்?
(1) நீரின் கனவளவு (2) பாத்திரத்தின் வடிவம்
(3) பாத்திரத்தின் அடியின் பரப்பளவு (4) நீர் நிரலின் நிலைக்குத்து உயரம்

**38.** கீழே தரப்பட்டுள்ள கலங்களில் எவை பல்கருக் கலங்களாகும்?
(1) செங்குருதிக் கலங்கள் (2) வெண்குருதிக் கலங்கள்
(3) வன்கூட்டுத் தசைக் கலங்கள் (4) இதயத் தசைக் கலங்கள்

**39.** திரவ நீர் நீராவியாக வளிக்குச் செல்லும் இரு வழிகள் கொதித்தல், கொதித்தாவியாதல் என்பனவாகும். இது தொடர்பாகக் கீழே தரப்பட்ட கூற்றுகளுள் **பொய்யான** கூற்று எது?
(1) கொதித்தல், கொதித்தாவியாதல் ஆகிய இரண்டின்போதும் நீரின் வெப்பநிலை மாறாமல் இருக்கும்.
(2) கொதித்தல் பார்க்கக்கூடிய செயன்முறையும் கொதித்தாவியாதல் பார்க்கமுடியாத செயன்முறையும் ஆகும்.
(3) காற்றின் கதி கொதித்தாவியாதலில் தாக்கத்தை ஏற்படுத்தும் எனினும் கொதித்தலில் தாக்கத்தை ஏற்படுத்தாது.
(4) கொதித்தலின்போது நீரின் வெப்பநிலை மாறாமல் இருக்கும் அதேவேளை கொதித்தாவியாதலின்போது நீரின் வெப்பநிலை குறையும்.

**40.** உணவு மைலின் அளவைக் குறுகியதாக்கிக் கொள்வதன் நோக்கம்
(1) தேசிய உணவை மக்கள் அதிகளவில் நுகரச் செய்தல்
(2) தரமான உணவை உட்கொள்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்துதல்
(3) பிரதேச வாரியாக உற்பத்தி செய்துகொள்ளக்கூடிய உணவுகளுக்கு அதிக கேள்வியைப் பெற்றுக்கொடுத்தல்
(4) உணவுகளைக் கொண்டு செல்லும்போது பயன்படுத்தப்படும் எரிபொருளின் அளவை இழிவளவாக்கல்

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

රහස්‍යයි
அந்தரங்கமானது

## අ.පො.ස. (සා.පෙළ) විභාගය - 2019
## க.பொ.த (சா.தர)ப் பரீட்சை - 2019

විෂයය අංකය / பாட இலக்கம்: **34** විෂයය / பாடம்: **விஞ்ஞானம்**

### I පත්‍රය - පිළිතුරු
### I பத்திரம் - விடைகள்

| ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | 3 | 11. | 2 | 21. | 2 | 31. | 2 |
| 02. | 2 | 12. | 2 | 22. | 2 | 32. | 2 |
| 03. | 1 | 13. | 3 | 23. | 1 | 33. | 4 |
| 04. | 4 | 14. | 2 | 24. | 2 | 34. | 3 |
| 05. | 1 | 15. | 1 | 25. | 3 | 35. | 1 |
| 06. | 4 | 16. | 1 | 26. | 1 | 36. | 1 |
| 07. | 3 | 17. | 4 | 27. | 2 | 37. | 4 |
| 08. | 4 | 18. | 3 | 28. | 4 | 38. | 3 |
| 09. | 1 | 19. | 3 | 29. | 4 | 39. | All |
| 10. | 4 | 20. | 1 | 30. | 3 | 40. | 4 |

විශේෂ උපදෙස් / விசேட அறிவுறுத்தல் } එක් පිළිතුරකට ලකුණු / ஒரு சரியான விடைக்கு **02** බැගින් / புள்ளி வீதம்

මුළු ලකුණු / மொத்தப் புள்ளிகள் **02 × 40 = 80**

පහත නිදසුනෙහි දක්වෙන පරිදි බහුවරණ උත්තරපත්‍රයේ අවසාන තීරුවේ ලකුණු ඇතුළත් කරන්න.
கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் உதாரணத்திற்கு அமைய பல்தேர்வு வினாக்களுக்குரிய புள்ளிகளை பல்தேர்வு வினாப்பத்திரத்தின் இறுதியில் பதிக.

නිවැරදි පිළිතුරු සංඛ්‍යාව / சரியான விடைகளின் தொகை: 25 / 40

I පත්‍රයේ මුළු ලකුණු / பத்திரம் I இன் மொத்தப்புள்ளி: 50 / 80

## இரண்டாம் வினாப்பத்திரத்தின் குறிக்கோள் பற்றிய அறிமுகம்

**பகுதி – A**

விஞ்ஞானத்தில் எண்ணக்கருக்கள், கோட்பாடுகள், நியதிகள் பற்றியும் மாணவர்களுக்கு முன்வைக்கப்படுகின்ற நாளாந்த நிகழ்வுகள், சந்தர்ப்பங்கள் பற்றித் தெளிவான சுருக்கமான விடைகளை அளிக்கும் விதத்தில் பிரச்சினைகளை முன்வைப்பதற்கு இங்கு விசேடமாக கவனம் செலுத்தப்படுகின்றது. வகுப்பறையில் கற்பித்தல், கற்றல் செயற்பாடுகள் மூலம் பெற்ற அறிவு, விளக்கம், செயல்முறை மூலமான அனுபவங்களை மாணவர்களுக்கு நிகழ்வுகள், சந்தர்ப்பங்கள் மூலமாக வழங்கி பிரச்சினைகளுக்கான விடைகளை சுருக்கமாகவும், நேரடியாகவும் வழங்குதல் கட்டமைப்பு வினாக்கள் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

**பகுதி – B**

விஞ்ஞானப் பாடம் தொடர்பாக வகுப்பறைக் கற்பித்தல் அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு மாணவர்களுக்கு முன்வைக்கப்படுகின்ற நிகழ்வு / சந்தர்ப்பம் பற்றி மிகவும் பரந்த விபரமான விடைகளை அளிக்கக்கூடிய முறையில் பிரச்சினைகளை முன்வைக்க இங்கு விசேட கவனம் செலுத்தப்படுகின்றது. ஆசிரியர் வழிகாட்டி நூல் மூலம் திட்டமிடப்பட்ட செயற்பாடுகளை அடிப்படையாகக் கொண்டும் கற்பித்தல் அனுபவங்களின் மூலம் எதிர்பார்க்கப்படுகின்ற தேர்ச்சி / தேர்ச்சி மட்டங்களை அடைந்துள்ளார்களா எனவும் பெற்ற அனுபவங்கள் புதிய சந்தர்ப்பங்களில் பயன்படுத்தவும், விருத்தி செய்யவும் முடியுமா எனவும் அறிந்து கொள்ளும் வகையில் இங்கு வினாக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

## இரண்டாம் வினாப்பத்திரத்திற்கு புள்ளியிடுவது தொடர்பான அறிவுறுத்தல்கள்

01. விடைத்தாள் மதிப்பீட்டை ஆரம்பிக்க முன்னர் ஒவ்வொரு வினா முழுவதும் கணிப்பீடு செய்யப்பட வேண்டும் என எதிர்பார்க்கப்படும் திறன்கள் / ஆற்றல்கள் எவை என நன்கு விளங்கிக் கொள்ளல்.
02. அந்தத் திறன்கள் தொடர்பாகப் பரீட்சார்த்தி வெளிக்காட்ட வேண்டிய நிபுணத்துவ மட்டம் யாது என்பதை திசைமுகப்படுத்தல் பயிற்சியின் போதும், புள்ளித் திட்டத்தைக் கலந்துரையாடும் போதும் தெளிவாக இனங்கண்டு கொள்ள வேண்டியது அவசியமாகும். **தரம் - 11 மாணவர் அடைய வேண்டிய அடைவு மட்டமே** பரீட்சாரத்தியினால் வெளிக்காட்டப்படல் வேண்டும். ஆசிரியர் என்ற வகையில் நீங்கள் பெற்றுள்ள அனுபவமும், இது தொடர்பாக பிரதம பரீட்சகரால் வழங்கப்படும் ஆலோசனைகளும் வழிகாட்டலும் பெரிதும் பயனுடையதாக அமையும்.
03. புள்ளி வழங்குதலில் பரீட்சகர்களுக்கிடையே உறுதிப்பாடு காணப்படல் வேண்டும். ஒரு குறித்த விடைக்கு வெவ்வேறு பரீட்சகரால் வழங்கப்படும் புள்ளிகளுக்கிடையே பாரிய வேறுபாட்டைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.
    (i) வழங்கப்பட்ட புள்ளி வழங்கும் திட்டத்தை முற்று முழுதாகப் பின்பற்றல்.
    (ii) பிரதம பரீட்சகரின் ஆலோசனைகளை நன்கு விளங்கி முற்று முழுதாகப் அமுல்படுத்தல்.
    (iii) பரீட்சைத் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ள விடைத்தாள் மதிப்பீட்டு அறிவுறுத்தல் கையேட்டில் குறிப்பிட்டுள்ள நுட்ப முறைகளை முற்று முழுதாகப் பின்பற்றல்.

# 34 – விஞ்ஞானம்

## பகுதி – II இற்கான புள்ளித் திட்டம்

| | | | | |
|---|---|---|---|---|
| (1) | (A) | (i) | | 01 |
| | | (ii) | | 01 |
| | | (iii) | | 01 |
| | | (iv) | | 01 |
| | | (v) | | 01 |
| | (B) | (i) | (a) | 02 |
| | | | (b) | 02 |
| | | (ii) | | 02 |
| | (C) | (i) | | 01 |
| | | (ii) | | 01 |
| | | (iii) | | 01 |
| | | (iv) | | 01 |
| மொத்தப் புள்ளிகள் | | | | 15 |

| | | | | |
|---|---|---|---|---|
| (2) | (A) | (i) | | 04 |
| | | (ii) | | 01 |
| | | (iii) | | 01 |
| | | (iv) | (a) | 01 |
| | | | (b) | 01 |
| | | | (c) | 01 |
| | (B) | (i) | | 01 |
| | | (ii) | | 02 |
| | | (iii) | | 03 |
| மொத்தப் புள்ளிகள் | | | | 15 |

| | | | | |
|---|---|---|---|---|
| (3) | (A) | (i) | (a) | 01 |
| | | | (b) | 01 |
| | | | (c) | 01 |
| | | | (d) | 01 |
| | | | (e) | 01 |
| | | (ii) | | 01 |
| | | (iii) | | 02 |
| | | (iv) | | 01 |
| | (B) | (i) | | 02 |
| | | (ii) | (a) | 01 |
| | | | (b) | 01 |
| | | | (c) | 01 |
| | | (iii) | | 01 |
| மொத்தப் புள்ளிகள் | | | | 15 |

| | | | | |
|---|---|---|---|---|
| (4) | (A) | (i) | | 01 |
| | | (ii) | | 01 |
| | | (iii) | | 01 |
| | | (iv) | | 01 |
| | | (v) | | 01 |
| | (B) | (i) | | 03 |
| | | (ii) | | 02 |
| | | (iii) | | 01 |
| | | (iv) | | 01 |
| | | (v) | | 01 |
| | | (vi) | | 02 |
| மொத்தப் புள்ளிகள் | | | | 15 |

| | | | | |
|---|---|---|---|---|
| (5) | (A) | (i) | | 04 |
| | | (ii) | | 01 |
| | | (iii) | | 01 |
| | | (iv) | | 02 |
| | | (v) | | 01 |
| | | (vi) | | 01 |
| | (B) | (i) | | 01 |
| | | (ii) | | 01 |
| | | (iii) | | 01 |
| | (C) | (i) | (a) | 01 |
| | | | (b) | 01 |
| | | (ii) | (a) | 01 |
| | | | (b) | 02 |
| | | | (c) | 02 |
| மொத்தப் புள்ளிகள் | | | | 20 |

| | | | | |
|---|---|---|---|---|
| (6) | (A) | (i) | | 01 |
| | | (ii) | | 02 |
| | | (iii) | | 01 |
| | | (iv) | (a) | 02 |
| | | | (b) | 01 |
| | (B) | (i) | | 01 |
| | | (ii) | | 01 |
| | (C) | (i) | | 02 |
| | | (ii) | | 02 |
| | | (iii) | | 01 |
| | (D) | (i) | | 02 |
| | | (ii) | | 02 |
| | | (iii) | | 02 |
| மொத்தப் புள்ளிகள் | | | | 20 |

| | | | | |
|---|---|---|---|---|
| (7) | (A) | (i) | | 02 |
| | | (ii) | | 04 |
| | | (iii) | | 02 |
| | | (iv) | | 03 |
| | (B) | (i) | | 03 |
| | | (ii) | | 02 |
| | | (iii) | | 01 |
| | | (iv) | | 02 |
| | | (v) | | 01 |
| மொத்தப் புள்ளிகள் | | | | 20 |

| | | | | |
|---|---|---|---|---|
| (8) | (A) | (i) | | 02 |
| | | (ii) | (a) | 01 |
| | | | (b) | 01 |
| | | (iii) | (a) | 01 |
| | | | (b) | 01 |
| | | | (c) | 01 |
| | | (iv) | | 01 |
| | | (v) | | 02 |
| | (B) | (i) | | 02 |
| | | (ii) | | 01 |
| | | (iii) | | 02 |
| | | (iv) | (a) | 01 |
| | | | (b) | 01 |
| | | | (c) | 01 |
| | | | (d) | 01 |
| | | | (e) | 01 |
| மொத்தப் புள்ளிகள் | | | | 20 |

| | | | | |
|---|---|---|---|---|
| (9) | (A) | (i) | | 03 |
| | | (ii) | (a) | 01 |
| | | | (b) | 01 |
| | | (iii) | | 01 |
| | | (iv) | | 01 |
| | | (v) | | 01 |
| | | (vi) | (a) | 01 |
| | | | (b) | 01 |
| | (B) | (i) | | 01 |
| | | (ii) | | 03 |
| | | (iii) | | 01 |
| | | (iv) | | 01 |
| | | (v) | | 01 |
| | | (vi) | | 01 |
| | | (vii) | | 02 |
| மொத்தப் புள்ளிகள் | | | | 20 |

# இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

## க.பொ.த (சா.தர)ப் பரீட்சை – 2019

## 34 – விஞ்ஞானம்

## புள்ளியிடும் திட்டம்

பகுதி A – கட்டமைப்பு வினாக்கள்

பகுதி B – கட்டுரை வினாக்கள்

# 34 – விஞ்ஞானம் - II ம் வினாப்பத்திரம்
## குறிக்கோள்கள்
## பகுதி 'A'

முதலாம் வினாவிற்கான குறிக்கோள்கள்

- வரைபுகள் மூலமாக எடுத்துரைக்கப்படும் தரவுகளை கிரகித்து வெளிப்படுத்தும் ஆற்றலைப் பரீட்சித்தல்.
- வரைபு மூலமாக எடுத்துரைக்கப்படும் தரவுகளை வரைவிலக்கணப்படுத்தும் ஆற்றலைப் பரீட்சித்தல்.
- உயிர் வாயுக்கள், அவற்றின் உற்பத்தி தொடர்பான அறிவைப் பரீட்சித்தல்.
- கழிவுப்பொருள் முகாமைத்துவம் பற்றிய தத்துவங்கள் தொடர்பான விளக்கத்தைப் பரீட்சித்தல்.
- இயற்கைச் சக்தியை உச்ச அளவில் பயன்படுத்தக் கூடியவாறு கட்டடங்கள் நிர்மாணம் செய்யப்படும் விதங்கள் பற்றிய அறிவைப் பரீட்சித்தல்.
- சக்தி மாற்றங்கள் தொடர்பான பிரயோக அறிவைப் பரீட்சித்தல்.
- சூழலுக்கு விடுவிக்கப்படும் பல்வேறு இரசாயனப் பொருட்களால் சூழலுக்கு ஏற்படும் பாதிப்புகள் பற்றிய அறிவைப் பரீட்சித்தல்.

இரண்டாம் வினாவிற்கான குறிக்கோள்கள்

- அங்கிகளின் பேரிராச்சியத்தை அடிப்படையாகக் கொண்ட நவீன பாகுபடுத்தல் தொடர்பான அறிவைச் சோதித்தல்.
- முள்ளந்தண்டற்ற விலங்கின் இயல்புகள் தரப்படுமிடத்து அவ்விலங்கு அடங்கும் கூட்டத்தை இனங்காணும் ஆற்றலைச் சோதித்தல்.
- பரிசோதனை ஒழுங்கமைப்பைத் திட்டமிட்டு அதனை ஒழுங்கமைத்து குறிக்கோள்களை இனங்காணும் ஆற்றலை ஆய்ந்தறிதல்.
- பரிசோதனையின் போது பெறப்பட்ட அவதானங்களைச் சரியாக அறிக்கைப்படுத்தும் ஆற்றலைச் சோதித்தல்.
- விஞ்ஞானத்தின் செயற்பாடுகள் சார்பான ஆற்றல்களை மதிப்பிடல்.

மூன்றாம் வினாவிற்கான குறிக்கோள்கள்

- மூலகங்களின் இயல்புகள் மற்றும் அவை ஆவர்த்தன அட்டவணையில் அமைந்துள்ள தானங்கள் பற்றிய தொடர்புகளை எடுத்துரைக்கும் ஆற்றல்களை இரண்டாம் ஆவர்த்தனம் தொடர்பாகப் பரீட்சித்தல்.
- ஆவர்த்தனமொன்றில் தரப்பட்டுள்ள தானங்களில் அமைந்துள்ள மூலகங்களால் ஆக்கப்படக் கூடிய சேர்வைகளின் சூத்திரங்களையும் அவற்றின் பிணைப்புத் தன்மையையும் எதிர்வு கூறும் ஆற்றல்களைச் சோதித்தல்.
- பல்பகுதியமாகும் ஆற்றலைக் கொண்டுள்ள மூலக்கூறுகளின் இயல்புகள் தொடர்பான அறிவைச் சோதித்தல்.
- கல்சியத்தின் முக்கியமான சேர்வைகளையும் அவை சார்ந்த பிரதான தாக்கங்கள் தொடர்பான அறிவையும் சோதித்தல்.
- காபனீரொட்சைட்டு வாயுவை இனங்காணும் பரிசோதனையுடன் தொடர்பான அறிவைச் சோதித்தல்.

நான்காம் வினாவிற்கான குறிக்கோள்கள்

A.

- எளிய செயற்பாடுகள் தொடர்பாக ஒழுங்கமைப்பை தயாரிக்கும் ஆற்றலைச் சோதித்தல்.
- மின்முதல்கள் தொடர்பான அறிவைச் சோதித்தல்.
- மின்சுற்றின் பல்வேறு கூறுகளின் தொழிற்பாடு தொடர்பான அறிவைச் சோதித்தல்.
- வரைபு மூலம் வகைகுறித்தல் தொடர்பான அறிவைச் சோதித்தல்.

B.

- தாக்கம், மறுதாக்கம் தொடர்பான அறிவைச் சோதித்தல்.
- மூன்று சமாந்தர விசைகளின் சமநிலை தொடர்பான அறிவைச் சோதித்தல்.
- விசைத்திருப்பம் தொடர்பான அறிவைச் சோதித்தல்.
- திருப்பத்துடன் தொடர்புடைய எளிய கணித்தல்கள் தொடர்பான ஆற்றலைச் சோதித்தல்.

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**34 T II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2019 දෙසැම්බර්
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2019 டிசெம்பர்
**General Certificate of Education (Ord. Level) Examination, December 2019**

විද්‍යාව II
விஞ்ஞானம் II
Science II

**07.12.2019 / 0830 - 1140**

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes


வினாத்தாளை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

சுட்டெண் : ..................................

அறிவுறுத்தல்கள் :
- ✳ விடைகளைத் தெளிவான கையெழுத்தில் எழுதுக.
- ✳ பகுதி A இன் நான்கு வினாக்களுக்கும் தரப்பட்ட இடத்தினுள்ளே விடைகளை எழுதுக.
- ✳ பகுதி B இல் உள்ள ஐந்து வினாக்களில் மூன்று வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
- ✳ விடைகளை எழுதிய பின்னர் பகுதி A ஐயும் பகுதி B ஐயும் ஒரே விடைத்தாளாக இணைத்து ஒப்படைக்க.

## பகுதி A

1. (A) ஒரு பாடசாலையின் ஆய்கூடத்திற்குத் தேவையான வாயு எரிபொருள் உயிர்வாயுப் பிறப்பாக்கியிலிருந்து பெற்றுக்கொள்ளப்படுகிறது. அங்கு உற்பத்தி செய்யப்படும் உயிர்வாயுவில் அடங்கியுள்ள நான்கு வகை வாயுக்களின் சேர்க்கை மூன்று நாட்களுக்கு ஒரு தடவை துணியப்பட்டது. அத்தகவல்கள் வரைபில் காட்டப்பட்டுள்ளன.




(i) குறிப்பிட்ட காலத்தின்போது எவ்வாயுவின் உற்பத்தி படிப்படியான அதிகரிப்பைக் காட்டுகிறது?
**$CH_4$ / மெதேன் / மீதேன்** (01)

(ii) 15 ஆம் நாளில் சேர்க்கைக்கேற்ப வாயுக் கலவையில் ஐதரசன் சல்பைட்டின் அளவு எவ்வளவாகும்?
**10 ppm** (அலகு குறிப்பிடப்படாவிடின் புள்ளியில்லை) (01)

(iii) தாவர, விலங்குக் கழிவுகளில் காற்றின்றிய பற்றீரியாக்கள் தாக்கம்புரிவதால் உயிர்வாயு உற்பத்தி செய்யப்படுகிறது. இது வரைபில் காட்டப்பட்டுள்ள எவ்வாயுச் சேர்க்கையின் மாற்றத்தினால் உறுதிப்படுத்தப்படுகின்றது?
**$O_2$ / ஓட்சிசன்** (01)

(iv) வரைபில் காட்டப்பட்டுள்ள வாயு வகைகளில் எவ்வாயு எரிபொருளாகச் செயற்படுகின்றது?
**$CH_4$ / மெதேன் / மீதேன்** (01)

(v) உயிர்வாயுப் பிறப்பாக்கியைப் பேணல் 4R எனக் குறிப்பிடப்படும் கழிவு முகாமைத்துவத்தின் கோட்பாடுகளில் எந்தக் கோட்பாட்டிற்கு உதாரணமாக அமையும்?
**மீள்சுழற்சி / Recycle** (01)

(B) (i) மேற்குறித்த ஆய்கூடத்தின் கட்டடத்தில் அதிக எண்ணிக்கையான யன்னல்கள் பொருத்தப்பட்டிருத்தல் ஒரு முனைப்பான அம்சமாக அமைகின்றது. அது பின்வரும் (a), (b) ஆகிய நிலைமைகளைப் பேணுவதற்குப் பங்களிப்புச் செய்யும் **இரண்டு** விதங்கள் வீதம் குறிப்பிடுக.

(a) ஆய்கூடத்தைப் பயன்படுத்துவோருக்குச் சாதகமான சூழலை ஏற்படுத்தல்
- சிறந்த காற்றோட்டத்தை ஏற்படுத்தல் (தொடர்பான கருத்துக்கள்) (01)
- சிறந்த ஒளியை (வெளிச்சத்தை) வழங்குதல் அல்லது அதிலிருந்து பெறப்படும் விசேட பயன்பாடு தொடர்பான கருத்துக்கள் • வாய்ப்பான வெப்பநிலையைப் பேணல். (01) (02)

(b) மின் நுகர்ச்சியை இழிவளவாக்கல் பேணல் (ஏதாவது இரண்டு கருத்துக்களுக்கு)
- மின்விளக்குகளின் பாவனையைக் குறைத்தல (01)
- மின் விசிறிகளின் / வளிப்பதனமாக்கிகளின் பாவனையைக் குறைத்தல் (01) (02)

(ii) இந்த ஆய்கூடத்தில் மின்குமிழ்களை ஒளிரச் செய்வதற்குப் பின்வருமாறு மின் உற்பத்தி செய்யப்படுகின்றது.

படிமுறை 01 : உயிர்வாயுவை எரித்து நீரைக் கொதிக்கச் செய்யும்போது உற்பத்தியாகும் கொதிநீராவியை உயர் அமுக்கத்தின் கீழ் பேணல்

படிமுறை 02 : உயர் அமுக்கத்தின் கீழ்ப் பேணப்பட்ட கொதிநீராவியைப் பீறிட்டு வெளியிடச் செய்வதன் மூலம் ஒரு சுழலியைத் தொழிற்படுத்தல்

படிமுறை 03 : தொழிற்படும் சுழலியைக் கொண்டு ஒரு மின்பிறப்பாக்கியைத் தொழிற்படுத்தல்

மேற்குறிப்பிட்ட செயன்முறைக்குரிய பின்வரும் சக்தி மாற்றத் திட்ட வரிப்படத்தைப் பூர்த்திசெய்க.

இரசாயனச் சக்தி —படிமுறை 01→ அமுத்தச் சக்தி —படிமுறை 02→ (a) இயக்க சக்தி (01) —படிமுறை 03→ (b) மின் சக்தி (01) (02)

(C) ஒரு குறித்த வாரத்தில் ஆய்கூடத்தின் செயற்பாடுகளின்போது நீரை வெளியேற்றும் கானுக்கும் சுற்றியுள்ள வளிமண்டலத்திற்கும் விடுவிக்கப்பட்ட சில சேர்வைகள் கீழே தரப்பட்டுள்ளன.

$Ca(OH)_2$, $K_2Cr_2O_7$, $Na_3PO_4$, $NO_2$, $SO_2$

மேற்குறித்த சேர்வைகளில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு கூற்றுக்கும் மிகப் பொருத்தமான சேர்வையை அவற்றிற்கு எதிரே தரப்பட்டுள்ள புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

(i) மண்ணின் pH பெறுமானம் அதிகரிப்பதில் பங்களிப்புச் செய்வது. $Ca(OH)_2$ / கல்சியம் ஐதரொட்சைட்டு (01)


(ii) நிலத்தடி நீரில் உள்ள பாரமான உலோக அமைப்பில் ஓர் அதிகரிப்பை ஏற்படுத்துவதற்குக் காரணமாக அமைவது. $K_2Cr_2O_7$ / பொற்றாசியம் இருகுரோமேற்று (01)

(iii) ஒரு நீர்நிலையில் ஒருங்கு சேரும்போது அதில் நற்போசணையாக்க நிலைமையை உருவாக்குவதில் பங்களிப்புச் செய்வது. $Na_3PO_4$ / சோடியம் பொஸ்பேற்று (01)

(iv) ஒளியிரசாயனத் தூமத்தையும் அமில மழையையும் உண்டாக்குவதற்குப் பங்களிப்புச் செய்வது. $NO_2$ / நைதரசனீரொட்சைட்டு (01)

15/15 (01)

2. (A) உயிர்வாழும் அங்கிகளின் பாகுபாடு பற்றிய ஒரு கோட்டுப்படம் கீழே தரப்பட்டுள்ளது.




(04)

மேற்குறித்த கோட்டுப்படத்தைப் பயன்படுத்திப் பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

(i) *W, X, Y, Z* என்னும் பெட்டிகளில் இருக்கும் புள்ளிக் கோட்டின் மீது உரிய உயிர்வாழும் அங்கிகளின் கூட்டத்தை எழுதி மேற்குறித்த கோட்டுப்படத்தைப் பூரணப்படுத்துக.

(ii) நுண்ணுயிர்கொல்லிக்குத் தாண்டற்பேறு **அற்ற** உயிர்வாழும் அங்கிகள் இடம்பெறும் பேரிராச்சியத்தைக் குறிப்பிடுக. ஆக்கியா / இயூக்கரியா (01)

(iii) அல்காக்கள் எந்த இராச்சியத்திற்கு உரியவை? புரோட்டிஸ்டா (01)

(iv) மேற்குறித்த பாகுபாட்டுக் கோட்டுப்படத்தில் காட்டப்பட்டுள்ள ஒவ்வொரு முள்ளந்தண்டற்ற கூட்டத்திற்கும் உரிய ஒரு சிறப்பியல்பு வீதம் கீழே தரப்பட்டுள்ளது. ஒவ்வொரு சிறப்பியல்புக்கும் எதிரே தரப்பட்டுள்ள புள்ளிக் கோட்டின் மீது அச்சிறப்பியல்பு உள்ள விலங்குக் கூட்டத்தை எழுதுக.


(a) மென் உடல்களைக் கொண்டிருத்தல் மொலஸ்கா (01)

(b) உடல் சம துண்டங்களாகப் பிரிக்கப்பட்டிருத்தல் அனலிடா (01)

(c) பொலிப்பு, மெதூசா என இரு வடிவங்களைக் கொண்டிருத்தல் சீலந்திரேற்றா (01)

(*B*) ஒளித்தொகுப்புச் செயன்முறைக்குத் தேவையான ஒரு காரணி பற்றிக் கற்பதற்கு ஒரு மாணவன் தயாரித்த ஓர் ஒழுங்கமைப்பு உருவில் காட்டப்பட்டுள்ளது.

இவ்வொழுங்கமைப்பு 48 மணித்தியாலங்களுக்கு இருட்டிலும் பின்னர் 5 மணித்தியாலங்களுக்கு ஒளியிலும் வைக்கப்பட்டது. அதன் பின்னர் இலையை மூடியிருந்த கண்ணாடித் தகடுகள் அகற்றப்பட்டு, இலை மாப்பொருள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டது.




(i) ஒளித்தொகுப்புக்குத் தேவையான எக்காரணியைச் சோதிப்பதற்கு இவ்வொழுங்கமைப்பு பயன்படுத்தப்பட்டுள்ளது?
**ஒளி (சூரிய ஒளி என எழுதியிருந்தாலும் புள்ளி வழங்குக.)** (01)

(ii) ஒழுங்கமைப்பை 48 மணித்தியாலங்களுக்கு இருட்டில் வைப்பதற்குக் காரணம் யாது?
**இலையில் உள்ள மாப்பொருளை அகற்றுவதற்கு (பரிசோதனைக்கு முன்)** (02/00)

(iii) மாப்பொருள் சோதனையில் இலையின் பின்வரும் பகுதிகள் ஒவ்வொன்றிலும் காணப்படும் நிறத்தை எழுதுக.

கறுப்புக் கண்ணாடித் தகடுகளினால் மூடப்பட்டிருந்த பகுதி **(இள)மஞ்சள் / (இளங்)கபிலம்** (01)

நிறமற்ற கண்ணாடித் தகடுகளினால் மூடப்பட்டிருந்த பகுதி **(கரு) நீலம் / (இளம்) ஊதா** (01)

ஒளி நேரடியாகப் படுமாறு திறந்திருந்த பகுதி **(கரு) நீலம் / (இளம்) ஊதா** (01) (03)

15/15

**3.** (*A*) ஆவர்த்தன அட்டவணையின் இரண்டாம் ஆவர்த்தனத்தில் உள்ள மூலகங்களின் குறியீடுகள் முறைப்படி பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| Li | Be | B | C | N | O | F | Ne |

(i) பின்வரும் கூற்றுகள் ஒவ்வொன்றுக்கும் உரிய மூலகத்தின் குறியீட்டினை மேற்குறித்த அட்டவணையிலிருந்து தெரிந்தெடுத்துத் தரப்பட்டுள்ள புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

(a) உயர்ந்தபட்ச முதலாம் அயனாக்கச் சக்தியைக் கொண்டிருப்பது. **Ne** (01)

(b) குறைந்தபட்ச மின் மறையியல்பை (மின்னெதிரியல்பை)க் கொண்டிருப்பது. **Li** (01)

(c) வைரம் ஒரு பிறதிருப்ப வடிவமாக இருப்பது. **C** (01)

(d) அணுக்களுக்கிடையே ஒரு மும்மைப் பிணைப்புடன் ஈரணு மூலக்கூறுகளாக இருப்பது. **N** (01)


(e) ஈரணு மூலக்கூறுகளாகவும் மூவணு மூலக்கூறுகளாகவும் வளிமண்டலத்தில் இருப்பது. **O** (01) (05)

(ii) Li, O என்னும் மூலகங்கள் சேர்ந்து உண்டாக்கும் சேர்வையின் சூத்திரத்தை எழுதுக.
**$Li_2O$** (01)


(iii) பின்வரும் அயன்களில் Li, O ஆகிய மூலகங்கள் சேர்ந்து உண்டாக்கும் சேர்வையில் அடங்கும் கற்றயனையும் அனயனையும் தெரிந்தெடுத்து, அவற்றின் கீழ்க் கோடு வரைக.

<u>$Li^+$</u> (01) $Li^{2+}$ $Li_2^{2+}$ $O^-$ <u>$O^{2-}$</u> (01) $O_2^{2-}$ (02)

(iv) C, F ஆகிய மூலகங்கள் மாத்திரம் அடங்கும், பல்பகுதியமாவதற்கான ஆற்றல் உள்ள மிகவும் எளிய ஒருபகுதிய மூலக்கூறின் கட்டமைப்பை வரைக.

 (01)

(*B*) கல்சியம் காபனேற்றுடன் தொடங்கி நிறைவேற்றப்பட்ட ஒரு தாக்கத் தொடர் பின்வரும் பாய்ச்சற் கோட்டுப்படத்தில் காட்டப்பட்டுள்ளது.





கரைசல் *X* இனூடாக வாயு *V* ஐக் குமிழிகளாகச் செலுத்தியபோது ஒரு தொங்கலாகத் திண்மக் கல்சியம் காபனேற்று உண்டாகின்றமையால், கரைசல் பால் நிறமாக மாறுகின்றது. இந்த அவதானிப்பு வாயு *V* ஐ இனங்காண்பதற்கான ஒரு சோதனையாகவும் பயன்படுத்தப்படுகின்றது.

(i) *U*, *W* ஆகிய சேர்வைகளின் இரசாயனச் சூத்திரங்களை எழுதுக.
*U* : **CaO** (01) *W* : **$Ca(OH)_2$** (01) (02)

(ii) பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு சரியான கருத்தை வெளிப்படுத்துமாறு தடித்த எழுத்துகளில் அச்சிடப்பட்ட ஒரு சொல்லை வெட்டி விடுக.
(a) திண்மம் $U$ ஆனது ~~அமிலம்~~ / மூலம் ஆகும். (01)
(b) திண்மம் $U$ இல் உள்ள பிணைப்பானது அயன் / ~~பங்கீட்டுவலுப்~~ பிணைப்பாகும். (01) (01)
(c) வாயு $V$ கரைந்த ஒரு நீர்க் கரைசலின் pH பெறுமானம் 7 இலும் குறைந்தது / ~~கூடியது~~ ஆகும். (03) 15/15
(iii) $X$ இற்கும் $Y$ இற்குமிடையே உள்ள தாக்கத்தில் உண்டாகும் பால்நிறக் கரைசலினூடாக மேலதிக வாயு $V$ ஐக் குமிழிகளாகச் செலுத்தும்போது எதனை அவதானிப்பீர்?
பால் நிறம் அற்றுப் போகும் (விடை எழுதாமல் விடப்பட்டிருப்பினும் புள்ளி வழங்குக) (01)

4. (A) ஆசிரியர் ஒருவர் மாணவர்களிடம் பின்வரும் பொருள்களையும் உபகரணங்களையும் வழங்கினார்.

ஒரு நைக்குரோம் கம்பிச் சுருள், நான்கு உலர் கலங்கள், ஓர் அம்பியர்மானி, ஓர் ஆளி, ஒரு வோல்ற்றுமானி, ஓர் இறையோதற்று, தொடுக்குங் கம்பி




(01)

உருவில் ஒரு நைக்குரோம் கம்பிச் சுருளின் இரு முனைகளுக்குமிடையே உள்ள அழுத்த வித்தியாசத்திற்கும் அதனூடாகப் பாயும் மின்னோட்டத்திற்குமிடையே உள்ள தொடர்புடைமையைப் பரிசீலிப்பதற்காக அம்மாணவர்களினால் ஒழுங்குசெய்யப்பட்ட ஓர் ஒழுங்கமைப்பின் ஒரு பூரணமற்ற சுற்று வரிப்படம் உருவிற் காட்டப்பட்டுள்ளது.


(i) உலர் கலங்கள் சுற்றுடன் தொடுக்கப்பட்டுள்ள விதத்திற்கு வழங்கும் பெயர் யாது?
தொடரான தொடுப்பு / தொடராக (01)

(ii) முடிவிடங்கள் $X$ இற்கும் $Y$ இற்குமிடையே தொடுக்கப்பட வேண்டிய உபகரணத்தின் நியமக் குறியீட்டினைச் சுற்று வரிப்படத்தில் வரைக.

(iii) இச்சுற்றுடன் ஓர் இறையோதற்று தொடுக்கப்படுவது ஏன்?
(சுற்றினூடு பாயும்) மின்னோட்டத்தை மாற்றுதல (அல்லது)கட்டுப்படுத்தல் / சுருளினூடான அழுத்த வேறுபாட்டை மாற்றுதல் (அல்லது)கட்டுப்படுத்தல் (01)


(iv) சுற்றைச் சரியாகப் பூரணப்படுத்திய பின்னர் ஆளியை நீண்ட நேரத்துக்கு மூடி வைப்பதனால் ஏற்படத்தக்க ஒரு நிலைமையைக் குறிப்பிடுக.
சுருள் வெப்பமடையும் / மின்கலம் மின்னிறக்கமடையும் / மின்கலத்தின் மின்னியக்க விசை (01)

(v) பரிசோதனையில் பெற்ற வாசிப்புகளைக் கொண்டு வரையப்பட்ட $V$ இற்கு எதிரே $I$ இன் வரைபு இங்கு காட்டப்பட்டுள்ளது. வரைபின் படித்திறனினால் வகை குறிக்கப்படும் பௌதிகக் கணியம் யாது?
R / தடை (01)




(B) ஓர் உலோகச் சிலையின் புவியீர்ப்பு மையத்தைக் காண்பதற்கு மாணவர் குழு ஒன்றினால் பின்வரும் செயற்பாடு செய்யப்பட்டது.

ஒரு கிடைத் தரையில் வைக்கப்பட்டுள்ள $X, Y$ என்னும் இரு சர்வசமத் தராசுகளின் ஒப்பமான தட்டுகள் மீது சிலையின் தலையும் இரு பாதங்களும் உருவிற் காட்டப்பட்டுள்ளவாறு வைக்கப்பட்டன. அப்போது தராசு $X$ இன் வாசிப்பு 250 N ஆகவும் தராசு $Y$ இன் வாசிப்பு 150 N ஆகவும் இருந்தன.




(i) சிலையின் சமநிலைக்காகத் தாக்கும் விசைகள் யாவை?
W / நிறை (01), R / A யில் செவ்வன் மறுதாக்கம் (01), S/ B யில் செவ்வன் மறுதாக்கம் (01) (03)
(நிறை,செவ்வன் மறுதாக்கம் என மாத்திரம் குறிப்பிடின் 2 புள்ளி)

(ii) சிலையின் புள்ளி $A$ இனூடாக உள்ள மறுதாக்கம் $R$ உம் புள்ளி $B$ இனூடாக உள்ள மறுதாக்கம் $S$ உம் யாவை?
$R$ 250 N (01) , $S$ 150 N (01) (02)

(iii) சிலையின் நிறை ($W$) யாது? 400 N (01)

(iv) $A$ இலிருந்து சிலையின் புவியீர்ப்பு மையம் $G$ இற்கு உள்ள தூரம் $d$ ஆகும். புள்ளி $A$ பற்றிச் சிலையின் நிறையின் திருப்பத்தை $d$ இன் சார்பில் எழுதுக.
Wd / 400(N) x d / நிறை x d (01)

(v) புள்ளி $A$ பற்றி மறுதாக்கம் $S$ இன் திருப்பம் யாது?
150 N x 2 m / 300 N m (01)

(vi) புள்ளி $A$ பற்றி $S$ இன் இடஞ்சுழித் திருப்பமானது புள்ளி $A$ பற்றி நிறை $W$ இன் வலஞ்சுழித் திருப்பத்திற்குச் சமமாகும். $d$ இன் பெறுமானத்தைக் காண்க.
400 (N) x d அல்லது Wd = 300 (N m) / $d = \frac{300 (N m)}{400 (N)}$ (01)
d = 0.75 m (01) (02) 15/15

# பகுதி – II B

**ஐந்தாம் வினாவிற்கான குறிக்கோள்கள்**

- இதயத்தின் பகுதிகளை இனங்காணல் தொடர்பான அறிவைச் சோதித்தல்.
- இதயத்தின் தொழிற்பாடு தொடர்பான அறிவைச் சோதித்தல்.
- இதய வட்டம் மற்றும் இதயத்துடிப்பு தொடர்பான அறிவைச் சோதித்தல்.
- குருதிச் சுற்றோட்டத் தொகுதி சார்ந்த நோய்கள் பற்றிய அறிவைச் சோதித்தல்.
- கலப்பிரிவு தொடர்பான அறிவைச் சோதித்தல்.
- ஒடுக்கற்பிரிவுக்கு உட்பட்ட கலத்தின் இயல்புகள் பற்றிய அறிவைச் சோதித்தல்.
- ஒடுக்கற்பிரிவையும் இழையுருப்பிரிவையும் ஒப்பிடும் ஆற்றலைச் சோதித்தல்.
- எதிரிடையான இயல்புச்சோடிகளின் இயல்புகளைப் பயன்படுத்தி அவை தலைமுறையுரிமையடையும் விதம் பற்றிய அறிவைச் சோதித்தல்.
- புனற் சதுரத்தை கட்டியெழுப்பும் ஆற்றலைச் சோதித்தல்.
- தலைமுறையுரிமையுடன் தொடர்புடைய கலைச்சொற்களை விளக்கும் ஆற்றலைச் சோதித்தல்.

**ஆறாம் வினாவிற்கான குறிக்கோள்கள்**

- அமிலங்களின் இயல்புகள் பற்றிய அடிப்படை அறிவைச் சோதித்தல்.
- தரப்பட்டுள்ள தாக்கமொன்றை இரசாயனச் சமன்பாடு மூலம் எடுத்துரைக்கும் ஆற்றலைச் சோதித்தல்.
- சூத்திரங்கள், சமன்பாடுகள் மூலம் தாக்கம் ஒன்றில் தோற்றுவிக்கப்படும் விளைவுகளின் அளவைத் துணியும் ஆற்றலைச் சோதித்தல்.
- எண்ணியல் தரவுகளைப் பொருத்தமான வகையில் கையாண்டு இரசாயனக் கணித்தல்களை மேற்கொள்ளும் ஆற்றல்களைச் சோதித்தல்.
- தரப்பட்டுள்ள கலவையொன்றிற்கான பொருத்தமான வேறாக்கும் நுட்ப முறையை தெரிவு செய்யும் ஆற்றலைச் சோதித்தல்.
- தேவைக்குப் பொருத்தமான வகையில் வழுவின்றிய உபகரண ஒழுங்கமைப்பை மேற்கொள்ளும் ஆற்றலைச் சோதித்தல்.
- தாக்கவீதத்தின் மீது செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் தொடர்பான அறிவைச் சோதித்தல்.
- பரிசோதனை ரீதியாக ஐதரசன் வாயுவை இனங்காணும் ஆற்றலைச் சோதித்தல்.

**ஏழாம் வினாவிற்கான குறிக்கோள்கள்**

A.

- குவிவுவில்லையுடன் தொடர்புடைய பிரதான புள்ளிகள் பற்றிய அறிவைச் சோதித்தல்.
- குவிவுவில்லையினூடாக பயணிக்கும் கதிர்களின் நடத்தைகள் பற்றிய அறிவைச் சோதித்தல்.
- குவிவுவில்லையால் உருவாக்கப்படும் விம்பங்களின் இயல்புகள் பற்றிய அறிவைச் சோதித்தல்.
- எளிய செயற்பாடு ஒன்றின் அத்தியாவசியமான படிமுறைகள் பற்றிய திறனைச் சோதித்தல்.

B.

- மின் உபகரணங்களின் திறன் தொடர்பான அறிவை அன்றாட வாழ்க்கையில் பயன்படுத்தல் தொடர்பான திறனைச் சோதித்தல்.
- மின்உபகரணங்கள் தொடர்பான எளிய கணித்தல்களைச் செய்யும் ஆற்றலைச் சோதித்தல்.

எட்டாம் வினாவிற்கான குறிக்கோள்கள்

A.

- சூழலை அவதானிக்கும் ஆற்றலைப் பரீட்சித்தல்.
- அவதானிப்புக்களின் அடிப்படையில் முடிவிற்கு வரும் ஆற்றல்களைச் சோதித்தல்.
- உதாரணங்கள் மூலம் அங்கிகளின் இயல்புகளை இனங்காணும் ஆற்றலைச் சோதித்தல்.
- ஈரில்லத் தாவரங்கள் தொடர்பான அறிவைச் சோதித்தல்.
- உணவுச் சங்கிலியைக் கட்டியெழுப்புதல் தொடர்பான ஆற்றலைச் சோதித்தல்.
- சூழற்றொகுதியொன்றின் உள்ளடக்கங்களை இனங்காணும் ஆற்றலைச் சோதித்தல்.

B.

- $Q = mc\theta$ எனும் சமன்பாட்டை பயன்படுத்தும் ஆற்றலைச் சோதித்தல்.
- பௌதிகக் கணியம் ஒன்றின் பெறுமதி அன்றாட வாழ்க்கையில் முக்கியத்துவமானதாக அமையும் சந்தர்ப்பத்தைச் சோதித்தல்.
- நிலைமாற்றத்துடன் தொடர்புடைய அறிவைச் சோதித்தல்.

ஒன்பதாம் வினாவிற்கான குறிக்கோள்கள்

A.

- தரப்பட்டுள்ள மின்பகுபொருள் மூலமும் நீரின் மூலமும் பிறப்பிக்கப்படும் அயன்களை இனங்காணும் ஆற்றலைச் சோதித்தல்.
- மின்பகுப்புக்கலமொன்றின் மின்வாய்களுக்கு அண்மையில் நடைபெறும் அரைத்தாக்கங்களை எழுதுமாற்றலைச் சோதித்தல்.
- தாழ்த்தல் என்பதனை வரைவிலக்கணப்படுத்தும் விதம் தொடர்பான அறிவைச் சோதித்தல்.
- மின்பகுப்பின் போது தோன்றும் விளைவுகளை அனுமானிக்கும் ஆற்றலைச் சோதித்தல்.


B.

- திரான்சிற்றரின் வகைகளை இனங்காணல் தொடர்பான அறிவைச் சோதித்தல்.
- மின்சுற்றுக்குத் தேவையான துணைக்கூறுகளை இணைக்கும் விதம் பற்றிய ஆற்றலைச் சோதித்தல்.
- சமிக்ஞை விரியலாக்கம் சம்பந்தமான அறிவைச் சோதித்தல்.
- இலத்திரனியல் உபகரணங்களின் தொழிற்பாடு தொடர்பான அறிவைச் சோதித்தல்.

## B பகுதி

● **5, 6, 7, 8, 9** ஆகிய வினாக்களுள் **மூன்று** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

5. (*A*) மனித இதயத்தின் உட்கட்டமைப்பின் பருமட்டான கோட்டு வரிப்படம் உரு I இல் காட்டப்பட்டுள்ளது.



உரு I


(i) உரு I இல் காட்டப்பட்டுள்ள *A*, *B*, *C*, *D* என்னும் குருதிக் கலன்களைப் பெயரிடுக.

(ii) *D* இனூடாகச் செல்லும் குருதியின் அமைப்புடன் ஒப்பிடும்போது *C* இனூடாகச் செல்லும் குருதியின் அமைப்பில் இருக்கும் பிரதான வேறுபாடு யாது?

(iii) *E* எனப் பெயரிடப்பட்டுள்ள வால்வு யாது?

(iv) இதயத் துடிப்பின்போது கேட்கும் சிறப்பியல்பான 'லப்' ஒலியும் 'டப்' ஒலியும் எவ்வாறு ஏற்படுகின்றன என்பதை சுருக்கமாக விவரிக்க.

(v) சுகதேகி ஒருவரின் ECG வரைபின் இதய வட்டத்தின் மூன்று சந்தர்ப்பங்களை ஒத்த அழுத்த வித்தியாசங்கள் உரு II இல் காட்டப்பட்டுள்ளன. அவ்வுருவில் *T* இன் மூலம் இதய வட்டத்தின் எந்தச் சந்தர்ப்பம் காட்டப்பட்டுள்ளது?



உரு II

(vi) இதயத் தசைகளுக்குக் குருதியை வழங்கும் குருதிக் கலனில் உறைந்த குருதி சிறைப்படுவதனால் தடை ஏற்படுகின்றபோது இதயத் தசைகள் நலிவடைகின்றன. இந்த நோய் நிலைமை எப்பெயரால் அழைக்கப்படுகின்றது?

(*B*) *X* என்ற முலையூட்டி விலங்கு இனத்தின் உடற் கலத்தில் அடங்கும் நிறமூர்த்தங்களின் எண்ணிக்கை 40 ஆகும்.

(i) *X* இன் புணரித் தாய்க் கலங்கள் ஒடுக்கற்பிரிவடைந்து கிடைக்கும் மகட் கலங்களில் அடங்கும் நிறமூர்த்தங்களின் எண்ணிக்கை யாது?

(ii) *X* இன் புணரித் தாய்க் கலங்களின் ஒடுக்கற்பிரிவின் மூலம் உண்டாகும் மகட் கலத்தின் வகையைப் பெயரிடுக.

(iii) இழையுருப்பிரிவின் மூலம் பெறப்படும் மகட் கலமானது ஒடுக்கற்பிரிவின் மூலம் பெறப்பட்ட மகட் கலத்திலிருந்து எவ்விதத்தில் வேறுபடும்?

(*C*) (i) தோட்டப் பட்டாணித் தாவரத்தின் வித்துகள் வட்ட வடிவத்தையும் திரங்கிய வடிவத்தையும் கொண்டவை. வட்ட வித்துகளை உண்டாக்கும் பரம்பரையலகு *R* உம் திரங்கிய வித்துகளை உண்டாக்கும் பரம்பரையலகு *r* உம் ஆகும். வித்து வடிவத்திற்கு ஆட்சியுள்ள ஓரினநுகப் பரம்பரையலகுகள் உள்ள தாவரத்தின் பிறப்புரிமையமைப்பு RR ஆகும். வித்து வடிவத்திற்காகப் பின்வரும் ஒவ்வொரு தாவரத்திற்குமுரிய பிறப்புரிமையமைப்பை எழுதுக.

(a) பின்னிடைவான ஓரினநுகமுள்ள பரம்பரையலகுகள் இருக்கும் தாவரம்

(b) பல்லினநுகமுள்ள பரம்பரையலகுகள் இருக்கும் தாவரம்

(ii) வட்ட வித்துகள் இருக்கும் ஒரு தூயவழித் தோட்டப் பட்டாணித் தாவரத்துடன் திரங்கிய வித்துகள் இருக்கும் தூயவழித் தோட்டப் பட்டாணித் தாவரம் ஒன்றைக் கலப்புப் பிறப்பாக்கஞ்செய்தபோது பெறப்பட்ட $F_1$ சந்ததியில் உள்ள எல்லாத் தாவரங்களும் வட்ட வித்துகளைக் கொண்டனவாக இருந்தன. $F_1$ சந்ததியின் இரு தாவரங்களைக் கலப்புப் பிறப்பாக்கஞ்செய்தபோது பெறப்பட்ட $F_2$ சந்ததியில் வட்ட வித்துகளைக் கொண்ட தாவரங்களுக்கும் திரங்கிய வித்துகளைக் கொண்ட தாவரங்களுக்கும் இடையே உள்ள விகிதம் 3 : 1 ஆக இருந்தது.

(a) $F_1$ சந்ததியின் தாவரங்களின் பிறப்புரிமையமைப்பை எழுதுக.

(b) $F_2$ சந்ததியின் தாவரங்களின் பிறப்புரிமையமைப்பைக் காட்டுவதற்குப் புன்னற் சதுரத்தை உருவாக்குக.

(c) $F_2$ சந்ததியின் தாவரங்களின் பிறப்புரிமையமைப்பு விகிதத்தை எழுதுக.

(மொத்தப் புள்ளிகள் 20)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (5) | (A) | (i) | | A – மேற்பெருநாளம் / முற்பெருநாளம் (01)<br>B – தொகுதிப்பெருநாடி (01)<br>C – சுவாசப்பை நாடி (01)<br>B – சுவாசப்பை நாளங்கள் (01) | (04) |
| | | (ii) | | (Cயினூடு செல்லும் குருதியில்) ஒட்சிசன் செறிவு குறைவு / $CO_2$ செறிவு அதிகம் /ஒட்சிசனிறக்கப்பட்ட குருதி காணப்படும் | (01) |
| | | (iii) | | இருகூர் வால்வு / மைற்றர் வால்வு | (01) |
| | | (iv) | | லப் - (இதயவறை சுருக்கமடையும் போது) முக்கூர் வால்வும் இருகூர் வால்வும் மூடப்படும் போது (01)<br>டப் - அரைமதி வால்வுகள் மூடப்படும் போது (01) | (02) |
| | | (v) | | சோணை இதயவறைத் தளர்வு (விரிவு) / பூரண இதய விரிவு (தளர்வு) | (01) |
| | | (vi) | | (முடியுரு) துரொம்போசிஸ் | (01) |
| | (B) | (i) | | 20 | (01) |
| | | (ii) | | விந்து / சூல் / முட்டை | (01) |
| | | (iii) | | (இழையுருப்பிரிவின் போது தோன்றும்) மகட்கலங்களில் உள்ள நிறமூர்த்த எண்ணிக்கை தாய்க்கலத்தின் நிறமூர்த்த எண்ணிக்கைக்கு சமன். / மகட்கலங்கள் தாய்க்கலத்தின் ஒத்த இயல்பைக் கொண்டிருக்கும் / நிறமூர்த்தங்களிடையே மாறல்கள் மிகக் குறைவு | (01) |
| | (C) | (i) | (a) | rr | (01) |
| | | | (b) | Rr | (01) |
| | | (ii) | (a) | Rr | (01) |
| | | | (b) | (see Punnett square below)<br>புணரிகளைக் குறிப்பிடல் - (01)<br>அட்டவணையை சரியாகப் பூரணப்படுத்தல் - (01) | (02) |
| | | | (c) | RR : Rr : rr (01)<br>1 : 2 : 1 (01)<br>( புனற் சதுரம் சரியாயின், விகிதம் மாத்திரம் எழுதியிருந்தாலும் 02 புள்ளிகள் வழங்குக) | (02) |
| | | | | மொத்தப் புள்ளிகள் | 20 |

(C)(ii)(b):

| (♀) / (♂) | R | r |
|---|---|---|
| R | RR | Rr |
| r | Rr | rr |

6. (A) அமிலங்கள், மூலங்கள், உப்புகள் ஆகியன ஆய்கூடத்தில் கிடைக்கக்கூடிய பிரதான இரசாயனப் பொருட்களின் மூன்று கூட்டங்களாகும்.

(i) நீரில் செயற்படும் விதத்தை அடிப்படையாகக் கொண்டு அமிலம் யாதென விளக்குக.

(ii) ஐதரோகுளோரிக்கமிலம் (HCl) ஒரு வன்னமிலமாக இருக்கும் அதே வேளை அசற்றிக்கமிலம் ($CH_3COOH$) ஒரு மென்னமிலமாகும். வன்னமிலத்திற்கும் மென்னமிலத்திற்கும் இடையிலான வேறுபாடு யாது?

(iii) ஓர் அமிலத்துடன் ஒரு மூலத்தைத் தாக்கம்புரியச்செய்து ஓர் உப்பையும் நீரையும் உண்டாக்கும் செய்முறை எப்பெயரால் அழைக்கப்படும்?

(iv) (a) சோடியம் ஐதரொட்சைட்டு மூலத்திற்கும் ஐதரோகுளோரிக்கமிலத்திற்கும் இடையே நடைபெறும் தாக்கத்திற்கான சமன்படுத்தப்பட்ட இரசாயனச் சமன்பாட்டை எழுதுக.

(b) மேற்குறித்த தாக்கம் நடைபெறும்போது பெறப்படும் ஓர் அவதானிப்பை எழுதுக.

(B) உதரச் சாறில் ஐதரோகுளோரிக்கமிலம் அடங்கியுள்ளது. இரைப்பையில் உள்ள உயர் அமிலத்தன்மை காரணமாக அதில் ஏற்படும் அசௌகரியங்களைச் சமநிலைப்படுத்துவதற்காக வழங்கப்படும் அமிலவெதிரி வில்லைகளில் மகனீசியம் ஐதரொட்சைட்டு ($Mg(OH)_2$) மூலம் அடங்கியுள்ளது.

(i) ஐதரோகுளோரிக்கமிலத்திற்கும் மகனீசியம் ஐதரொட்சைட்டு மூலத்திற்கும் இடையே நடைபெறும் தாக்கத்தின்போது உண்டாகும் உப்பு யாது?

(ii) மகனீசியம் ஐதரொட்சைட்டின் ஒரு மூல் ஐதரோகுளோரிக்கமிலத்துடன் முற்றாகத் தாக்கம்புரியும்போது உண்டாகும் நீரின் மூல்களின் எண்ணிக்கை யாது?


(C) ஒரு போத்தலில் $500\ cm^3$ அசற்றிக்கமிலக் கரைசல் உண்டு. இக்கரைசலின் அடர்த்தி $1.04\ g\ cm^{-3}$ ஆக இருக்கும் அதே வேளை அடங்கியுள்ள அசற்றிக்கமிலத்தின் திணிவு 26 g ஆகும்.

(i) போத்தலில் அடங்கியுள்ள அசற்றிக்கமிலக் கரைசலின் திணிவைக் கணிக்க.

(ii) மேற்குறித்த கரைசலில் உள்ள அசற்றிக்கமிலத் திணிவின் சதவீதத்தைக் கணிக்க.

(iii) வினாகிரி என்பது திணிவிற்கேற்ப ஏறத்தாழ 5% அசற்றிக்கமிலம் உள்ள நீர்க் கரைசலாகும். அசற்றிக்கமிலத்தின் கொதிநிலை 118 °C ஆகும். வினாகிரி மாதிரி ஒன்றைப் பயன்படுத்தித் திணிவிற்கேற்ப ஏறத்தாழ 10% அசற்றிக்கமிலம் அடங்கியிருக்கும் ஒரு கரைசலைப் பெறுவதற்குப் பயன்படுத்தத்தக்க ஒரு நுட்பமுறையைக் குறிப்பிடுக.

(D) ஐதான ஐதரோகுளோரிக்கமிலத்தையும் நாக (Zn) உலோகத்தையும் பயன்படுத்தி ஓர் ஐதரசன் வாயு மாதிரியைத் தயாரிப்பதற்கு மாணவன் ஒருவன் அமைத்த உபகரண ஒழுங்கமைப்பு பின்வரும் உருவில் காட்டப்பட்டுள்ளது.




(i) மேற்குறித்த ஒழுங்கமைப்பில் காணப்படும் வழுக்கள் **இரண்டைக்** குறிப்பிடுக.


(ii) கூம்புக் குடுவையினுள்ளே நடைபெறும் தாக்கத்தின் வீதத்தை அதிகரிக்கச் செய்வதற்குப் பின்பற்றத்தக்க **இரண்டு** நடைமுறைகளைத் தெரிவிக்க.

(iii) தாக்கத்தின்போது உற்பத்தி செய்யப்பட்ட வாயு ஐதரசனாகும் என்பதை உறுதிப்படுத்துவதற்கு ஒரு சோதனையையும் அதற்குரிய அவதானிப்பையும் குறிப்பிடுக.

(மொத்தப் புள்ளிகள் 20)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (6) | (A) | (i) | | (நீர்க்கரைசலில்) $H^+$ அயன்களை விடுவிக்கும் சேர்வைகள் / அயனாக்கம் அடையும் போது / கூட்டற் பிரிகையடையும் போது $H^+$ அயன்களை விடுவிக்கும் சேர்வைகள். | (01) |
| | | (ii) | | வன்னமிலங்கள் முற்றாக அயனாக்கம் அடையும் / கூட்டற் பிரிகையடையும் (01)<br>மென்னமிலங்கள் பகுதியாக / ஓரளவு / முற்றற்ற அளவில் அயனாக்கம் அடையும் / கூட்டற் பிரிகையடையும் (01) | (02) |
| | | (iii) | | நடுநிலையாக்கம் | (01) |
| | | (iv) | (a) | $\underbrace{NaOH_{(aq)} + HCl_{(aq)}}_{(01)} \longrightarrow \underbrace{NaCl_{(aq)} + H_2O_{(l)}}_{(01)}$<br>(பௌதிக நிலைகள் அவசியமன்று) | (02) |
| | | | (b) | பாத்திரம் வெப்பமடைதல் / வெப்பநிலை அதிகரித்தல் / வெப்பம் வெளிவிடப்படல் | (01) |
| | (B) | (i) | | $MgCl_2$ / மக்னீசியம் குளோரைட்டு | (01) |
| | | (ii) | | 2 (mol) | (01) |
| | (C) | (i) | | $d = \frac{m}{v}$ / m = d.v / 1.04 (g $cm^{-3}$) x 500 ($cm^3$) (01)<br>= 520 (g) (01) | (02) |
| | | (ii) | | $= \frac{26\ (g)}{520\ (g)} \times 100$ (01)<br>= 5% (01) | (02) |
| | | (iii) | | ஆவியாக்கல் / ஆவியாதல் / எளிய காய்ச்சி வடித்தல் / பகுதிபடக் காய்ச்சி வடித்தல் | (01) |
| | (D) | (i) | | • வாயுவை வளியின் மேன் முகப்பெயர்ச்சியினால் சேகரித்தல் / வாயுச்சாடி நிமிர்த்தி வைக்கப்பட்டிருத்தல். (01)<br>• முள்ளிப்புனல் கரைசலினுள் அமிழ்த்தப்படாமலிருத்தல் / முள்ளிப்புனல் திரவ மட்டத்திற்கு மேலாகக் காணப்படல் (01) | (02) |
| | | (ii) | | • அமிலத்தின் செறிவை அதிகரித்தல்<br>• குடுவையை வெப்பமேற்றல்<br>• நாகத்தைத் தூளாக்கிப் பயன்படுத்தல்<br>• ஊக்கியைப் பயன்படுத்தல்<br>(ஏதாவது இரண்டிற்கு) | (02) |
| | | (iii) | | பரிசோதனை – <u>எரியும் தணற்குச்சியைப்</u> பிடித்தல் (01)<br>அவதானம் - <u>"பொப்" எனும் ஒலியுடன்</u> எரியும். / எரிந்து அணையும் | (02) |
| | | | | மொத்தப் புள்ளிகள் | 20 |


**7.** (*A*) கண்ணாடிக் குவிவு வில்லை ஒன்றின் தலைமை அச்சுக்குச் சமாந்தரமாக வரும் ஓர் ஒளிக் கதிர் வில்லையில் பட்டு முறிவடைந்த பின்னர் செல்லும் விதம் உரு I இல் காட்டப்பட்டுள்ளது. வில்லையின் தலைமை அச்சின் மீது $A, B, C, D, E$ ஆகிய புள்ளிகள் $AB = BC = CD = DE$ ஆகுமாறு குறிக்கப்பட்டுள்ளன.





உரு I

(i) புள்ளி $C$ ஐயும் புள்ளி $D$ ஐயும் பெயரிடுக.

(ii) கீழே தரப்பட்டுள்ள உரு II, உரு III ஆகியவற்றை உமது விடைத்தாளில் பிரதிசெய்து கதிர் வரிப்படங்களைப் பூர்த்திசெய்க.




உரு II




உரு III

(iii) வில்லையின் தலைமை அச்சின் மீது $A, B$ ஆகிய புள்ளிகளுக்கிடையே வைக்கப்பட்ட ஒரு பொருளின் மூலம் உண்டாக்கப்படும் விம்பத்தைக் கருதுக. அவ்விம்பத்தின் **இரண்டு** இயல்புகளைக் குறிப்பிடுக.

(iv) ஒரு குவிவு வில்லையின் குவியத்தூரத்தை அண்ணளவாகக் காண்பதற்குச் செய்யத்தக்க ஒரு செயற்பாட்டைச் சுருக்கமாக விவரிக்க.

(*B*) வீட்டில் பயன்படுத்தப்படும் ஓர் இழை மின் விளக்கில் 240 V, 60 W எனக் குறிப்பிடப்பட்டுள்ள அதே வேளை அதற்குச் சமமான பிரகாசத்தைத் தரத்தக்க ஓர் LED மின் விளக்கில் 240 V, 10 W எனக் குறிக்கப்பட்டுள்ளது.

(i) இழை மின் விளக்கு 10 மணித்தியாலங்கள் ஒளிருமானால் அதில் நுகரப்படும் மின் சக்தியின் அளவை யூலில் (J) கணிக்க.



(ii) LED மின் விளக்கு 10 மணித்தியாலங்கள் ஒளிருமானால் அதில் நுகரப்படும் மின்சக்தி யூலில் (J) எவ்வளவு?

(iii) வீட்டுப் பயன்பாட்டிற்கு LED மின் விளக்கு அனுகூலமானது என்பதை மேற்குறிப்பிட்ட கணிப்பின் மூலம் காட்டுக.

(iv) மேற்குறிப்பிட்ட LED மின் விளக்கு நாள் ஒன்றுக்கு 10 மணித்தியாலம் வீதம் 30 நாட்களுக்கு ஒளிர்ந்துள்ளது. இக்காலத்தின்போது விளக்குக்கு வழங்கப்பட்ட மின் சக்தியின் அளவைக் கிலோவாற்று மணித்தியாலத்தில் (kWh) காண்க ($1\ kWh = 3.6 \times 10^6\ J$).

(v) ஓர் இழை மின் விளக்குக்கு வழங்கப்படும் மின்சக்தியில் 40% ஆனது வெப்பமாக விரயமாகின்றது. இதற்கேற்ப விளக்கின் திறன் யாது?

(மொத்தப் புள்ளிகள் 20)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (7) | (A) | (i) | | C - ஒளியியல் மையம் (01)<br>D - குவியம் (01) | (02) |
| | | (ii) | | <br>உரு II<br>(02/00)<br><br>உரு III<br>(02/00) | (04) |
| | | (iii) | | • தலைகீழானது<br>• உருப்பெருத்தது<br>• மெய்விம்பம்<br>• E இற்கு அப்பால் / குவியத்தூரத்திலும் இருமடங்கு தூரத்துக்கு அப்பால் / 2F இற்கு அப்பால் தோன்றும்.<br>(ஏதாவது இரண்டிற்கு) | (02) |
| | | (iv) | | • - தொலைவிலுள்ள பொருளொன்றின் (01)<br>- தெளிவான விம்பத்தை திரையில் / சுவரில் பெறல் (01)<br>- விம்பத்திற்கும் வில்லைக்கும் இடைப்பட்ட தூரத்தை அளத்தல் (01)<br>**(OR)**<br>• - சூரிய ஒளிக்கற்றையை வில்லையினூடு முறிவடைந்து (01)<br>- தெளிவான ஒளிப் பொட்டு ஒன்று உருவாக்கும் புள்ளியை அறிந்து (01)<br>- வில்லைக்கும் ஆடிக்கும் இடைப்பட்ட தூரத்தை அளத்தல் (01)<br>(படம் மூலம் காட்டியிருப்பின்<br>சமாந்தரமாக படும் கதிர்களுக்கு (01)<br>கதிர்கள் குவிக்கப்படல் (01)<br>குவியத் தூரம் காட்டப்படல் (01) | (03) |
| | (B) | (i) | | E = Pt (01)<br>= 60 x 10 x 60 x 60 (01)<br>= 2160,000 (J) (01)<br>சமன்பாடு எழுதாவிட்டாலும் பிரதியீட்டுக்கும் விடைக்கும் 3 புள்ளிகள் வழங்குக | (03) |
| | | (ii) | | = 10 x 10 x3600 (01)<br>= 360,000 (J) (01)<br>சரியான விடை மாத்திரம் குறிப்பிட்டிருந்தாலும் 2 புள்ளிகள் வழங்குக. | (02) |
| | | (iii) | | LED இன் மூலம் குறைந்தளவு சக்தியே பயன்படுத்தப்படும் | (01) |
| | | (iv) | | $= \frac{10 \times 3600 \times 10 \times 30}{3.6 \times 10^{6}}$ (01)<br>= 3 kW h (01) | (02) |
| | | (v) | | 60% | (01) |
| | | | | மொத்தப் புள்ளிகள் | 20 |

**8.** (*A*) நன்கு சூரிய ஒளியுள்ள நாள் ஒன்றில் குளச் சூழற்றொகுதிக்கு அருகாமையில் ஒரு களக் கற்கையில் ஈடுபட்ட மாணவர் குழு ஒன்றின் மூலம் பின்வரும் அவதானிப்புகள் அறிக்கையிடப்பட்டன.

* ஐதரில்லா, வலிஸ்னேரியா, கொட்டி, சல்வீனியா போன்ற நீர்வாழ் தாவரங்கள் குளத்தில் அதிக அளவில் உள்ளன.
* நீரினுள்ளே அமிழ்ந்து வளரும் தாவரங்களிலிருந்து வாயுக் குமிழிகள் வெளிவருகின்றன.
* குளத்தினுள் உள்ள மீன்கள் செட்டைகளை அசைத்தவாறு நீந்துகின்றன.
* மீன்கொத்தி குளத்தினுள்ளே உள்ள மீனைக் கவ்விக்கொண்டு பறக்கின்றது.
* சிறிய நீர்வாழ் பூச்சியினம் ஒன்று குளத்து நீரின் மேற்பரப்புக்கு அடிக்கடி வந்து கீழ்நோக்கிச் செல்கின்றது.

(i) மேற்குறித்த அவதானிப்புகளுக்கு ஏற்ப அங்கிகளின் சிறப்பியல்புகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(ii) (a) நீரில் அமிழ்ந்து வளரும் தாவரங்களிலிருந்து வெளியேறும் வாயுக் குமிழிகளில் அதிகமாக அடங்கியுள்ள வாயுவைக் குறிப்பிடுக.

(b) அவ்வாயுவை உற்பத்தி செய்தல் தொடர்பான செயன்முறை யாது?

(iii) (a) அவதானித்த நீர்வாழ் தாவரங்களில் ஈரில்லத் தாவரம் யாது?


(b) அது ஏன் ஈரில்லத் தாவரமாக அழைக்கப்படுகிறது?

(c) அத்தாவரத்தின் மகரந்தச்சேர்க்கைக்கான காரணி யாது?

(iv) மாணவர்களால் அவதானிக்கப்பட்ட இடைத்தாக்கங்களை அடிப்படையாகக் கொண்டு மூன்று இணைப்புகள் உள்ள உணவுச் சங்கிலி ஒன்றை உருவாக்குக.

(v) மேற்குறித்த அவதானிப்புகளுக்கேற்ப அக்குளம் ஒரு சூழற்றொகுதியாகக் கருதப்படலாம் என்பதை உறுதிப்படுத்துவதற்கு **இரண்டு** விடயங்களை முன்வைக்க.

(*B*) *A*, *B* என்பன புறக்கணிக்கத்தக்க வெப்பக் கொள்ளளவுள்ள இரு சிறிய சர்வசமமான பாத்திரங்களாகும். *A* இல் தன்வெப்பக் கொள்ளளவு $4200\ J\ kg^{-1}\,^{\circ}C^{-1}$ ஆகவுள்ள நீரின் 2 kg உம் *B* இல் தன்வெப்பக் கொள்ளளவு $2100\ J\ kg^{-1}\,^{\circ}C^{-1}$ ஆகவுள்ள திரவம் X இன் 2 kg உம் உள்ளன. ஒவ்வொரு பாத்திரத்திற்கும் வெப்பம் 8400 J வீதம் வழங்கப்படுகின்றது.




(i) மேற்குறித்த வெப்பத்தின் அளவை வழங்கும்போது பாத்திரம் *A* இல் அடங்கியுள்ள நீரின் வெப்பநிலை எவ்வளவு உயருமெனக் கணிக்க.

(ii) மேற்குறித்த வெப்பத்தின் அளவை வழங்கும்போது பாத்திரம் *B* இல் அடங்கியுள்ள திரவம் *X* இன் வெப்பநிலை எவ்வளவு உயரும்?

(iii) மேற்குறித்த திரவங்களில் எது ஒரு குளிர்ச்சியாக்கும் கருவியாகப் பயன்படுத்தப்படுவதற்கு மிகவும் உகந்தது? உமது விடைக்குரிய காரணங்களைக் குறிப்பிடுக.

(iv) பாத்திரம் *A* இல் ஒரு வெப்பமானி இடப்பட்டது. அதன் பின்னர் பாத்திரத்தைத் தொடர்ச்சியாக வெப்பமாக்கும்போது நீர் ஒரு குறித்த வெப்பநிலைக்கு வந்த பின்னர் வெப்பமானியின் வாசிப்பு மேலும் உயர்வடையாது நின்றுவிட்டது.

(a) அம்மாறா வெப்பநிலை எப்பெயரால் அழைக்கப்படும்?

(b) அச்சந்தர்ப்பத்தில் நீரில் எதனை அவதானிக்கலாம்?

(c) அதில் நடைபெறும் நிலை மாற்றம் யாது?


(d) அச்சந்தர்ப்பத்தில் உறிஞ்சப்படும் வெப்பத்திற்கு வழங்கப்படும் பெயர் யாது?

(e) தொடர்ந்து வெப்பம் வழங்கியபோதும் திரவத்தின் வெப்பநிலை உயர்வடையாது நின்றமைக்கான காரணத்தைக் குறிப்பிடுக.


(மொத்தப் புள்ளிகள் 20)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (8) | (A) | (i) | | • அசைவு<br>• சுவாசம்<br>• போசணை (ஏதாவது இரண்டிற்கு) | (02) |
| | | (ii) | (a) | ஒட்சிசன் / $O_2$ | (01) |
| | | | (b) | ஒளித்தொகுப்பு | (01) |
| | | (iii) | (a) | வலிஸ்னேரியா | (01) |
| | | | (b) | ஆண் பூ, பெண் பூ என்பன வெவ்வேறு தாவரங்களில் காணப்படல் | (01) |
| | | | (c) | நீர் | (01) |
| | | (iv) | | நீர்த்தாவரம் → மீன் → மீன்கொத்தி /<br>நீர்த்தாவரம் → பூச்சி → மீன் /<br>நீர்த்தாவரம் → பூச்சி → மீன்கொத்தி<br>(ஏதாவது ஒன்றிற்குப் புள்ளி வழங்குக)<br>(நீர்த்தாவரத்திற்குப் பதிலாக வினாவில் தரப்பட்ட எந்தவொரு தாவரம் குறிப்பிட்டிருந்தாலும் புள்ளி வழங்குக) | (01) |
| | | (v) | | • உயிருள்ளனவும் உயிரற்றனவும் காணப்படல் (01)<br>• அவற்றிடையே இடைத்தாக்கங்கள் காணப்படல் (01)<br>(உயிருள்ள – உயிருள்ள இடைத் தொடர்பு)<br>(உயிருள்ள – உயிரற்ற இடைத்தொடர்பு)<br>(உயிரற்ற – உயிரற்ற இடைத்தொடர்பு) | (02) |
| | (B) | (i) | | $Q = mc\theta$<br>அல்லது<br>8400 (J) = 2 (kg) x 4200 ($J\,kg^{-1}\,{}^{\circ}C^{-1}$) x $\theta$ (01)<br>$\theta = 1\,{}^{\circ}C$ (01) | (02) |
| | | (ii) | | $\theta = 2\,{}^{\circ}C$ | (01) |
| | | (iii) | | • நீர் (01)<br>• ஒரே வெப்பத்தை வழங்கும் போது வெப்பநிலை அதிகரிப்பு குறைவு / நீரின் தன்வெப்பக் கொள்ளளவு அதிகம் (01) | (02) |
| | | (iv) | (a) | கொதிநிலை | (01) |
| | | | (b) | (வாயுக்) குமிழிகள் வெளியேறல் | (01) |
| | | | (c) | திரவம் → வாயு / ஆவியாக்கல் / திரவநீர் நீராவியாக மாறல் | (01) |
| | | | (d) | (ஆவியாதலின்) மறைவெப்பம் | (01) |
| | | | (e) | நீர் மூலக்கூறுகளிடையே காணப்படும் மூலக்கூற்றுப் பிணைப்பு விசைகளுக்கு எதிராக வேலை ஆற்றப்படல்./<br>மூலக்கூற்றிடைப் பிணைப்பு அல்லது கவர்ச்சி விசையை உடைத்தலுக்காக வெப்பம் அகத்துறிஞ்சப்படல். | (01) |
| | | | | மொத்தப் புள்ளிகள் | 20 |

**9.** (*A*) கீழே தரப்பட்டுள்ள உரு I, உரு II ஆகியவற்றில் முறையே உருகிய சோடியம் குளோரைட்டையும் நீர்ச் சோடியம் குளோரைட்டுக் கரைசலையும் காபன் (காரீயம்) மின்வாய்களைப் பயன்படுத்தி மின்பகுப்புச் செய்வதற்குத் தயார்செய்யப்பட்ட இரு மின்பகுப்புக் கலங்கள் காட்டப்பட்டுள்ளன.



உரு I



உரு II

மின்பகுப்பு நடைபெறும்போது $Q, R, V, W$ என்னும் அயன்கள் உருவில் அம்புக்குறியினால் காட்டப்பட்ட திசைகளில் செல்லும். இவற்றுள் $Q, R$ ஆகிய அயன்கள் இரு கலங்களுக்கும் பொதுவானவை.

(i) $Q, R, W$ ஆகிய அயன்களின் இரசாயனக் குறியீடுகளை முறையே எழுதுக.

(ii) (a) உரு I இல் காட்டப்பட்டுள்ள கலத்தின் கதோட்டிற்கு அருகில் நடைபெறும் அரைத் தாக்கத்தை எழுதுக.

(b) அத்தாக்கம் ஏன் தாழ்த்தல் என அழைக்கப்படுகின்றது?

(iii) உரு II இல் உள்ள கலத்தின் அனோட்டிற்கு அருகில் நடைபெறும் அரைத் தாக்கத்தை எழுதுக.


(iv) மேற்குறித்த கலங்களில் காபன் மின்வாய்களுக்குப் பதிலாகப் பயன்படுத்தத்தக்க உலோக மின்வாய் எது?

(v) சோடியப் பிரித்தெடுப்பின்போது டவுனின் கலத்தில் நடைபெறும் தாக்கம் மேற்குறித்த உருவில் எக்கலத்தில் நடைபெறுகிறது?

(vi) (a) மேலே உரு II இல் காட்டப்பட்டுள்ள கலத்தில் மின்பகுப்பு நடைபெறும்போது அதில் அடங்கியுள்ள கரைசலுடன் சில பீனோப்தலீன் துளிகள் சேர்க்கப்பட்டன. அப்போது கிடைக்கும் அவதானிப்பைக் குறிப்பிடுக.

(b) நீர் குறிப்பிட்ட அவதானிப்புக்கான காரணத்தை விளக்குக.

(*B*) ஒரு பொதுசன ஒலிபெருக்கல் தொகுதியின் பகுதிகள் கீழே தரப்பட்டுள்ளன.



விரியலாக்கச் சுற்று


நுணுக்குப்பன்னி


ஒலிபெருக்கி

(i) விரியலாக்கச் சுற்றுடன் எவ்வகைத் திரான்சிற்றர் தொடுக்கப்பட்டுள்ளது?

(ii) திரான்சிற்றரில் $X, Y, Z$ எனக் குறிக்கப்பட்டுள்ள முடிவிடங்களைப் பெயரிடுக.

(iii) விரியலாக்கச் சுற்றின் எம்முடிவிடங்களுடன் நுணுக்குப்பன்னி இணைக்கப்பட வேண்டும்?

(iv) நுணுக்குப்பன்னிக்குக் கிடைக்கும் ஒலி அலைகள் மின் சைகைகளாக மாற்றப்படும் தோற்றப்பாட்டைப் பெயரிடுக.

(v) விரியலாக்கச் சுற்றின் எம்முடிவிடங்களுடன் ஒலிபெருக்கியை இணைக்க வேண்டும்?

(vi) நுணுக்குப்பன்னியிலிருந்து வழங்கப்படும் சைகையுடன் தொடர்புபட்ட எப்பௌதிகக் கணியம் விரியலாக்கச் சுற்றின் மூலம் விரியலாக்கப்படும்?

(vii) விரியலாக்கப்பட்ட சைகையை ஒலிபெருக்கிக்கு வழங்கும்போது அதன் மூலம் ஒலி உற்பத்தி செய்யப்படும் விதத்தைச் சுருக்கமாக விளக்குக. (மொத்தப் புள்ளிகள் 20)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (9) | (A) | (i) | | Q – $Cl^-$ (01)<br>R - $Na^+$ (01)<br>W - $H^+$ (01) | (03) |
| | | (ii) | (a) | $Na^+(l)$ + e ⟶ Na (l)<br>(பௌதிக நிலைகள் அவசியமன்று) | (01) |
| | | | (b) | ($Na^+$ அயன் ஒரு) இலத்திரனைப் பெற்றுக் கொள்வதால் | (01) |
| | | (iii) | | 2 $Cl^-(aq)$ ⟶ $Cl_2(g)$ + 2e / 2 $Cl^-(aq)$ - 2e ⟶ $Cl_2(g)$ /<br>$Cl^-(aq)$ ⟶ ½$Cl_2(g)$ + e<br>(பௌதிக நிலைகள் அவசியமன்று) | (01) |
| | | (iv) | | Pt / பிளாற்றினம் | (01) |
| | | (v) | | உரு I | (01) |
| | | (vi) | (a) | (நிறமற்ற கரைசல்) இளஞ்சிவப்பு நிறமாதல் | (01) |
| | | | (b) | NaOH உருவாதல் / $OH^-$ செறிவு அதிகரித்தல் | (01) |
| | (B) | (i) | | npn | (01) |
| | | (ii) | | X - அடி /B /b / Base<br>Y - சேகரிப்பான் /C /c / Collector<br>Z - காலி /E /e/ Emitter | (03) |
| | | (iii) | | P மற்றும் Q | (01) |
| | | (iv) | | மின்காந்த தூண்டல் | (01) |
| | | (v) | | R மற்றும் S | (01) |
| | | (vi) | | வீச்சம் | (01) |
| | | (vii) | | காந்தப்புலத்தினுள் உள்ள சுருளுக்கு சமிக்ஞை கிடைக்கும் போது அதன் மீது இரு புறமும் விசை தொழிற்படும் (01)<br>இதன் போது சுருள் / கூம்பு / விதானம் அதிர்வதனால் ஒலியலை பிறப்பிக்கப்படும்(01)<br>இக்கருத்துக்கள் வெளிப்படுமாறு விடை எழுதியிருப்பின் புள்ளி வழங்குக. | (02) |
| | | | | மொத்தப் புள்ளிகள் | 20 |